# நீங்கள் நாங்கள் யார்?



அ.ம. வரப்பிரசாதம் சே.ச.

JAFFNA COLLEGE LIBRARY
16 OCT 1979
VADDUKODDAI JAFFNA

# சமய, சமூக நிலையம்
## 281, டீன்ஸ் வழி
## கொழும்பு-10
## இலங்கை

குறிக்கோள் :

சமய, சமூக நிலையத்தின் அடிப்படைக் குறிக்கோள் மானிட விடுதலைக்காகப் பணிபுரிவதாகும். நமது நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சி மனிதப் பண்புகளையும், மக்கள் இலட்சியங்களையும் ஒருங்கிணைத்த ஒரு முன்னேற்றமாக அமைவதற்கான ஒத்தாசைகளை நல்குவதே நமது நோக்கமாகும். பொருளாதார வளர்ச்சி சமுதாய நீதியையும், கலாசார, சமயப் பண்புகளையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டுமென நாம் அவாவுகிறோம்.

இலங்கையின் சமுதாய—பொருளாதார அமைப்பில் அடிப்படை மாற்றம் காண்பது அவசியமென நாம் ஏற்றுக்கொள்கிறோம். நாட்டுப் பொதுமக்களின் நியாயபூர்வமான வேட்கைகளை நிறைவேற்றுதற்கு மாற்றம் அவசியமாகிறது.

பல்வேறு இலட்சியங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமுதாய அமைப்புகள் சிற்சில சாதனைகளை நிலைநாட்டியிருப்பினும், மனித சமத்துவத்தையும், சுதந்திரத்தையும், தன்மானத்தையும் புறக்கணித்துள்ளமையால், இந்தப் பண்புகளைப் பாதுகாக்கின்ற முறையில் தொடர்ச்சியான சமுதாய வளர்ச்சியும் மாற்றமும் தேவைப்படுகிறது. மனித சுதந்திரத்தையும், உலகச் சொத்துக்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்ளுதலையும் பாதுகாக்கின்ற ஒரு சமுதாய அமைப்புத் தேவைப்படுகிறது. எல்லா மனிதர்களின் தன்மானத்தையும், உரிமைகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவகையில் மக்களின் சிந்தனையிலும் பண்பாட்டிலும் மாற்றம் விளைத்தல் வேண்டும். இதனை அறிவுப் புரட்சி அன்றி சிந்தனைப் புரட்சி எனக் கூறினும் பொருந்தும். நீதியான ஒரு சமுதாயம் நிலவவேண்டும். சமுதாய உறவுகளில் சமத்துவமும், சுதந்திரமும் பாதுகாக்கப்படவேண்டும். இதற்கான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். இதுவே எங்கள் இலக்கு.

(தொடர்ச்சி அட்டை பக்கம் III)

15/2

# நீதிக்கு நீ சாட்சியா?

அருள்திரு. அ. ம. வரப்பிரசாதம், சே. ச.

விமுக்தி வெளியீடு
சமய, சமூக நிலையம்
281, டின்ஸ் வழி
கொழும்பு – 10

விமுக்தி வெளியீடு
மார்கழி, 1976

உரிமை:
விமுக்தி வெளியீடுகள்,
சமய, சமூக நிலையம்,
281, டீன்ஸ் வழி,
கொழும்பு-10.

N 1991

200
வரப்

அச்சுப்பதிவு:
திருமகள் அழுத்தகம்
சுன்னுகம்

விலை: ரூ. 2-50

இந்த நூலை வெளியிடுவதிற் பலவகையிலும் தக்க உதவிகள் புரிந்த தந்தை திஸ்ஸ பாலசூரிய அவர்களுக்கு எனது நன்றியை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

— அ. ம. வரப்பிரசாதம்

# பதிப்புரை

நம் நாட்டின் தலைசிறந்த சமய, சமூக சிந்தனை யாளர்களுள் ஒருவரான தந்தை திஸ்ஸ பாலசூரிய அவர்களின் வழிநடத்தலின்கீழ் இயங்கி வருவது சமய, சமூக நிலையம். இந்நிலையம் பல புரட்சிகரமான சிந்தனைகளுக்கு வித்திட்டுள்ளது. சமயப்பணி என்பது வரட்டுத் தத்துவ விசாரணையல்ல; ஆண்டவனைப் பற்றிய விளக்கங்கள் அல்ல; பரலோக வாழ்வைப் பற்றிப் போதிப்பது அல்ல. அது சமுதாய வாழ்வினைச் செப்பனிடப் பயன்படுத்தவேண்டும்; சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்து அலறிக்கொண்டிருக்கும் ஏழை மக்களின் வாழ்வில் விடிவேற்படுத்த வேண்டும்; மனிதர்களைப் பிரிக்காது மனிதர்களை ஒற்றுமைப் படுத்தவேண்டும்; கொடியோரைக் கண்டிக்க வேண்டும்; சமுதாய அநீதிகளுக்குத் துணைநிற்காது சாடவேண்டும்; சமுதாயத்தில் நீதியையும், நேர்மை யையும் நிலைநாட்டப் போராடவேண்டும்; புதிய தோர் உலகம் செய்யவேண்டும்; புரட்சிகரமான மாற்றங்கள் செய்யவேண்டும்; புதிய சமுதாயத்தை யும், புதிய மனிதனையும் உருவாக்க வேண்டும். இதுவே சமயப்பணி; இதுவே சமுதாயப்பணி. இவ்வாறு சமயத்தையும் சமுதாயத்தையும் ஒன் றிணைத்து, மனித விடுதலையை வளர்த்தெடுக்கும் புதிய இயக்கத்திற்கு நம் நாட்டில் கால்கோலியது சமய, சமூக நிலையம்.

மக்களிடையே விடுதலை உணர்வுகளைப் பரப்புவ தற்காகவும் சமுதாயச் சுரண்டல்களை அம்பலப் படுத்துவதற்காகவும், கருத்தரங்கங்கள் நடாத்து வதும் நூல்கள் வெளியிடுதலும் இந்நிலையத்தின் பணிகளுள் அடங்கும். நம் நாட்டில் தேயிலைப் பயிர்ச் செய்கையின் மூலம், நமது நாடும் தொழிலாளர்களும் எவ்வாறு சுரண்டப்பட்டார்கள் என்பதை அழுத்தந்

திருத்தமாக அம்பலப்படுத்தி, தோட்டங்களைத் தேசிய மயமாக்குவதில் இந்நிலையம் பல கருத்தரங்கங்களின் மூலம், ஒரு தூண்டுகோலாய் அமைந்தது. பின்னர் நம்நாட்டின் வர்த்தகத்திலும், பொருளுற்பத்தியிலும் பல்நாட்டு நிறுவனங்கள் தலையிட்டு, நம்நாட்டு வளத்தையும், உழைப்பையும் எவ்வாறு சுரண்டி வந்தன என்பதைப் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டி, அந்நிய கம்பெனிகளுக்கும் நம் நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுக்கும் சட்டமூலம் ஒத்தி வைக்கப்படுவதில் ஒத்துழைப்பு நல்கியது. நிலச் சீர் திருத்தத்தை வரவேற்றும், பெண்கள் விடுதலைக்கு வழி கோலியும் இந் நிலையம் சமுதாயப்பணி ஆற்றி வந்துள்ளது.

இவைபற்றிய நூல்கள் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டு முதல் தமிழ் நூல்கள் வெளியிடவும் ஆரம்பித்துள்ளோம். மும்மொழி வெளியீடுகள் மூலம் நம் நாட்டு மக்களின் விடுதலைப்பணிக்கு எங்கள் ஒத்தாசையை நல்க விரும்புகிறோம். இந்த அவாவினுக்கு இயையவே அருள்திரு. அ. ம. வரப்பிரசாதம் அவர்களின் கூரிய சிந்தனையில் உதித்த இந்நூலைத் தமிழ் வாசகர்களுக்கு வழங்குகிறோம். எங்கள் வெளியீடுகள் உங்கள் விடுதலைக்கு உதவவேண்டும் என்பதே எங்கள் இலட்சியம். 'நீதிக்கு நீ சாட்சியா?' உங்கள் சிந்தனைகளைத் தூண்டி அநீதி எதிர்ப்புப் போராட்டத்தில் உங்களை ஈடுபடுத்தும் என்ற நம்பிக்கையுடன் இந்நூலை உங்களிடம் ஒப்படைக்கிறோம்.

**விமுக்தி வெளியீட்டாளர்**

JAFFNA COLLEGE LIBRARY
16 OCT 1979
VADDUKODDAI JAFFNA

# நீதிக்கு நீ சாட்சியா?

## ஆசியாவில் கிறிஸ்துவம்

**எண்ணிக்கை, சட்டம், சடங்கு:**

கடந்த நான்கு நூற்றுண்டுகளாக ஆசியாவில் நற்செய்திப்பணி நடந்து வருகிறது. இன்று ஏறத்தாழ 3½ கோடிப் பேர் கிறிஸ்துவச் சபைகளின் உறுப்பினர். ஆசியா மக்கள் தொகையோ 240 கோடி. ஃபிலிப்பீன்ஸ் தீவுகள் தவிர வேறு 'கிறிஸ்துவ நாடு' ஆசியாவில் இல்லை. ஒருசில சபைகள் தங்கள் உறுப்பினரின் எண்ணிக்கையைப் பெருக்குவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளன: விளைவு — மேலெழுந்தவாரியான ஆன்மீக வாழ்வு; சட்டங்களையும் சடங்குகளையும் மையமாக வைத்து நடைபெறும் நிர்வாகமும், இறை வழிபாடும்.

**அரும்பணிகள் செய்தும் எதிர்ப்பு:**

கல்வித்துறையிலும், மருத்துவம், உடல்நலவியல் ஆகிய பணிகளிலும் பல கிறிஸ்துவச் சபைகள் அரும் பெரும் வெற்றிகண்டுள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை. இன்னும் தனி மனிதனுக்குரிய நன்மதிப்பை அவை போற்றியுள்ளன. மனிதத் தன்மையின் வளர்ச்சிக்கு இடையூறுக இருக்கும் கட்டுக்கதைகளைக் கற்பனையினின்று நீக்கத் துணையாய் இருந்துள்ளன. வரலாற்றுப் பாணியிலும், விஞ்ஞான ரீதியிலும் மனித

வாழ்வைச் சீர்தூக்கிப் பார்க்க உதவி புரிந்துள்ளன. சுருங்கச் சொல்லின் ஆசிய சமுதாய முன்னேற்றத் திற்கு அவை வித்திட்டுள்ளன என்று கூறலாம். எனி னும், ஆசிய மக்களில் தெளிவுபெற்ற பலர் கிறிஸ்துவச் சபைகளை எதிர்த்து வந்துள்ளனர். ஏன்?

**கிறிஸ்துவமும் பண்பாடும்:**

இயேசுவையோ, நற்செய்தி பகரும் அன்பின் குறிக்கோளையோ ஆசிய மக்கள் எதிர்ப்பதில்லை. ஆனால் பல கிறிஸ்துவச் சபைகள் அறிந்தோ, அறியாமலோ, அந்நிய அரசியல், பொருளாதார, பண்பாட்டு ஆதிக் கத்துக்கு உடந்தையாக இருந்துள்ளன என்பதால் தான் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆசியாவுக்கு வந்த மேற்கத்திய குடியேற்ற மக்களிலேயே சிறந்தவர்கள் கிறிஸ்துவ வேதபோதகர். வாணிபர், படைவீரர், நிர்வாகத்தினர் ஆகியோரின் பேராசையையும், கொடூரத்தையும் குறைத்தபெருமை அவர்களுடையது. என்றாலும் அந்நியர் ஆசிய நாடுகளின் பண்பாட்டுப் பெருமையைச் சிதைத்தனர் என்ற குற்றச்சாட்டு கிறிஸ்துவ வேத போதகர்களையும் சாரும். சீனாவில் ரிக்ச்சி, இந்தியாவில் தெநோபிலி (தத்துவபோதகர்), பெஸ்கி (வீரமாமுனிவர்) ஆகிய இத்தாலிய இயேசு சபையினரைப் போன்ற பரந்த நோக்கம் கொண்ட வர்கள் மிகச் சிலர்தான். இவர்கள் ஆசிய மக்களின் கலைகளை மதித்து, அவை வளர்ச்சி பெறவும் உதவினர். ஏனையோர் கிறிஸ்துவ மறைக்கு மக்களை ஈர்க்கும்போது, அவர்களைத் தங்கள் பண்பாட்டினின்று வேரோடு களைய முற்பட்டனர்.

**சுரண்டல் சூழலில் நற்செய்திப் பணி:**

குடியேற்ற மக்களின் பொருளாதாரச் சுரண்டல் கிறிஸ்துவ வேதபோதகர்கட்குத் தெரியாமல் இல்லை. எனினும், பெரும்பாலும் இந்த அநீதத்திற்கு விரோத மாய் அவர்கள் குரல் எழுப்பவில்லை. அநீதங்களைப்

பல சமயங்களில் மழுப்பிவிட்டனர். அந்த ஆட்சிச் சூழல்களில் தாங்கள் மறைபரப்புப்பணி செய்ய முடிந்ததைப் பெரிதாகக் கருதிப் போதனை செய்தனர். விடுதலை, முன்னேற்றம், பண்பாடு ஆகியனவற்றை ஒட்டிய கருத்துக்கள் புதுக்கிறிஸ்துவர்கட்கு அவர்கள் அளித்த பயிற்சியிலும், போதனையிலும் இடம்பெறவில்லை. தாழ்ச்சி, கீழ்ப்படிதல், அதிகாரிகட்குப் பிரமாணிக்கமாயிருத்தல் முதலிய புண்ணியங்களை வலியுறுத்தினர். பொதுவில் இறைவன் திருவுளத்திற்குப் பணிதல் கிறிஸ்துவ மறையின் முக்கிய அம்சமாகப் போற்றப்பட்டது. அந்நியர் ஆதிக்கத்துக்கு உட்பட்டு அமைதியாக இருத்தல் அத்திருவுளத்தின் முக்கிய பகுதியாகக் கருதப்பட்டது. மனந்திரும்பியவர்கள் கிறிஸ்துவப் பக்தி முயற்சிகளில் முன்னேறினர் ; ஆனால் அவர்களது சமுதாயங்களில் அன்பு மனநிலையும், வேறு உயர்ந்த மனிதப்பண்புகளும் சிறக்கவில்லை.

**ஆசிய சுதந்திரத்தில் அச்சமோ?**

கிறிஸ்துவச்சபைகள் ஆசிய நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களிற் பங்கு எடுக்கவில்லை என்றே கூற வேண்டும். இச்சபைகளைச் சேர்ந்த தனிநபர்கள், சிறு குழுக்கள், சிறப்பாக வியட்நாமிலும், இந்தோனிசியாவிலும்—அரசியல் விடுதலைக்காகப் பாடுபட்டனர். ஆனால், அதிகாரபூர்வமாகக் கிறிஸ்துவச்சபைகள் ஒதுங்கிநின்றன; ஒருவித அச்சத்தினால் பீடிக்கப்பட்டிருந்தன. அரசியல் சுதந்திரம் நற்செய்திப் பணிக்குத் தடையாக இருக்கும் என்ற தப்பெண்ணந்தான் அந்தப் பீதியின் அடிப்படைக் காரணம்.

மேற்கு உலக அமைப்பையே முற்றிலும் சார்ந்திருந்தன கிறிஸ்துவச் சபைகள். ஐரோப்பிய — அமெரிக்க மக்களின் கண்ணோட்டத்திலேயே திருச்சபை அதிகாரிகள் ஆசிய மக்களின் அமைப்புக்களையும் சீர்தூக்கிப் பார்த்தனர். தங்கட்குப் பழக்கமான அமைப்புக்களே கிறிஸ்துவ மறைக்கு ஏற்றன என்பது அவர்கள்

எண்ணம். ஏன், இன்றுகூட ஆசியாவில் உள்ள கிறிஸ்துவச்சபைகளின் உலகக்கண்ணோட்டம் சிந்தனைச் சுதந்திரத்துடன் அமையவில்லை.

### சமுதாய மாற்றங்கட்கு எதிர்ப்பு:

மேலும், சமுதாயப் பொருளாதாரப் பாணியில் முதலாளித்துவ அமைப்புடன் இணைந்திருந்தன ஆசிய கிறிஸ்துவச் சபைகள். அவை செய்த பணிகளிற் சில நேரடியாகச் சமுதாய வேறுபாடுகளை நீடிக்கவைத்தன. அதிக சம்பளம் கட்டிப் படிக்கும் பள்ளிகள், கல்லூரிகள் ஓர் எடுத்துக்காட்டு. இந்தியாவிலும், இலங்கையிலும் ஆங்கிலேயப் பண்பாட்டில் அதிக மோகங் கொண்ட கிறிஸ்துவர்களும், பொருள் செல்வாக்குள்ளவர்களுமே இந்த 'உயர்' நிறுவனங்களை நடத்துவதில் வாக்குரிமை கொண்டிருந்தனர். முதலாளித்துவத்தின் தீமைகட்கு விரோதமாக இவர்களா குரல் எழுப்புவார்கள்? ஜப்பானிய சோஷியலிஸக் கட்சியைச் சார்ந்த கிறிஸ்துவர்கள் மட்டுந்தான் ஆசியாவிலேயே சிறப்புத் தரும் விதிவிலக்காய் இருந்தனர். பெருவாரியாக ஆசிய சபைகளின் நிர்வாகங்கள் சமுதாயப் பழமை விரும்பிகள், முதலாளித்துவக் கூட்டாளிகள் நிறைந்தனவாகவே காட்சியளித்தன.

### ஒதுங்கி நிற்பது நடுநிலைமையா?

'ஆன்ம மீட்பு' (அதாவது, பலர் சிந்தனையில், ஆன்மாக்களை மோட்சத்துக்கு அனுப்புதல்) மட்டும் கிறிஸ்துவ சபைகளின் பணி என்ற குறுகலான கருத்து மக்களைச் சமுதாய, அரசியல் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி நிற்கச் செய்தது. எந்தக் கட்சியையும் சேராத நடுநிலையை வகிப்பதாகச் சபைத் தலைவர்கள் எண்ணி இருக்கலாம். ஆனால், பொதுவாகச் சுதந்திரப் போராட்டத்திலிருந்து ஒதுங்கி நிற்கச் செய்த நிலைமை உண்மையில் அநீதி இழைத்தவரைச் சார்ந்து நின்ற நிலைமையேயாகும்.

**ஆசியச் சூழலில் உருவாகும் இறையியல்:**

2ஆம் வத்திக்கான் சங்கம் பெருமளவு ஒரு ஐரோப்பிய சங்கம் என்றே கூறவேண்டும். இந்தியா, ஆபிரிக்கா, இந்தோனிசியா முதலிய பல 3ஆம் உலக நாடுகளைச் சார்ந்த ஆயர்கள் நூற்றுக்கணக்கில் அதில் கலந்துகொண்டார்கள் என்பது உண்மை. ஆனால், இவர்களிற் பெரும்பாலோர் புதிதாக உருவாகிவந்த இறையியலுடன் அறிமுகம் பெற்றவர்கள் அல்லர்; இவர்களிற் பலர் இறையியல் பயின்றது ஐரோப்பா வில்தான் — ஆனால் 1930இலிருந்து 1950 வரை பெரும் சமுதாயப் பிரச்சினைகளோடு கலவாத, வாய்ப் பாடு போன்ற இறையியலையே இவர்கள் அந்த ஆண்டு களிற் கற்றிருக்க முடியும். ஆசியச் சூழலில் தங்களுக் குள்ள தொல்லைகளிடையே பலருக்குப் புதியபாணியில் இறையியலை நோக்கும் வாய்ப்புகள் கிட்டவில்லையோ? ஏதோ, சங்கம் மேற்கு உலகக் கண்ணோட்டத்திலேயே வெளியீடுகளை விடுத்தது. துணிவுடன் திருச்சபையை நவீன உலகில் புகச்செய்யவில்லை. 'இன்றைய உலகில் திருச்சபை' என்ற சிறந்த அறிக்கைகூட உலகிற்குத் தேவைப்படும் புரட்சி மனப்பான்மையில் தோய்ந்த தாகத் தென்படவில்லை.

**மெடெல்லின், மெக்சிக்கோ, மணிலா:**

1965இல் கூட கத்தோலிக்கத் திருச்சபை உலக மாற்றங்களின் போக்கையும், வேகத்தையும் முழு வதும் உணர்ந்து புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. 1968இல் மெடெல்லின் நகரில் நடைபெற்ற இலத்தீன் அமெரிக்க ஆயரின் குழுதான் கத்தோலிக்கச் சிந்தனை யில் ஒரு மைல்கல்போல் மிளிர்கின்றது: எளியநாடுகள் புரட்சி முறைகளின் முழு விடுதலையை எய்தக் கையாளும் போராட்டங்களைக் கிறிஸ்துவ இறை இயலில் நோக்கு கின்றது.

வத்திக்கான் ஆயர்குழு (செப்டம்பர் — 1971) 'உலகில் நீதி' என்ற அறிக்கையின் தொடக்க உரையில்

கூறுவது: ''நீதிக்காக உழைப்பதும், உலகை நல் உருப்பெறச் செய்வதிற் பங்கேற்றலும் நற்செய்தியைப் போதிப்பதின் இன்றியமையாத பகுதியென எமக்குத் தெளிவாய்த் தோன்றுகிறது. அதாவது மனித இனத்தின் மீட்புக்காகவும், எவ்வித அடக்கு நிலையிலிருந்தும் அது விடுதலைபெறும்படியாகவும் திருச்சபை ஏற்றுள்ள பொறுப்பில் இணைபிரியாப் பணிகள் அவை.''

அதே ஆண்டு அக்டோபர் மாதம் மெக்சிக்கோ ஆயர்குழு போற்றத்தகுந்த துணிவுடன் அறிக்கை விடுத்தது: மெக்சிக்கோ மக்களை அந்நாட்டு அரசும், வடஅமெரிக்க மக்களும் அடக்குமுறைகட்கு உட்படுத்துவதாகக் குற்றம் சாட்டியது. அமெரிக்க உல்லாசப் பயணிகளது டாலர்களை ஈர்க்கும் பொருட்டு, மெக்சிக்கோ ''ஒரு பூலோக சுவர்க்கம், அமைதியும், சட்ட உணர்வும், காருண்யமும் நிறைந்த நாடு'' என்று வெளியிட்ட மெய்கலந்த பொய்ப் பிரசாரத்தைக் கண்டித்தது. தன்னிடம் கையேந்தும் நாடாக மெக்சிக்கோவை மாற்றும் முயற்சியைக் குறித்து அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சாடியது. இதைவிட வியப்புக்குரியது யாதெனில், ஆயர்கள் தங்கள் சொந்த வாழ்க்கைத் தரத்தையும், முறைகளையும் கண்டனம் செய்துகொண்டதுதான்: ''எங்களது டாம்பீக வாழ்க்கைப் பாணியும், சாமானிய மக்களது கவலைகளிலிருந்து முற்றிலும் ஒதுங்கிய வாழ்வும் அடக்குமுறையில் ஆட்சிசெய்வோரது கூட்டணியில் திருச்சபையையும் இணைத்துள்ளது'' என்று அறிக்கை பகர்ந்தது!

ஆசியாவிலுள்ள ஆயர்கள் 1974ஆம் ஆண்டில்தான் மணிலா நகரில் நடத்திய கருத்தரங்கில் ஒரு புதிய சமுதாய இறையியல் சிந்தனையைத் தொடங்கி வைத்தனர்: அதற்குப் பெரிதும் துணை நின்றவர்கள் ஃபிலிப்பீன்ஸ் தீவுகளிலுள்ள முற்போக்குள்ள இறையியல் சிந்தனையாளர். இந்தியா போன்ற நாடுகளிலோ

எச்சரிக்கையும் பாதுகாப்பும் நிறைந்த மனப்பான்மை தான் திருச்சபை அதிகார வட்டங்களில் பெருமளவு காணப்படுகிறது. இறைவழிபாடு, பள்ளிகளில் மறைக் கல்வி ஆகியனவற்றைத் தீட்டுப்படாமல் வைத்திருக்க வேண்டும் என்ற மிதமிஞ்சிய அக்கறை சமுதாய-இறையியல் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதில்லை; அத்தகைய வளர்ச்சியை ஒருவகை அச்சத்துடன் நோக்குகின்றது.

## இரக்கமுள்ள கிறிஸ்துவின் நீதிப் புரட்சி

நீதிக்காக, சுதந்திரத்துக்காக, சமத்துவத்துக்காகப் பகைமையின்றி யார், எங்குப் போராட்டம் நடத்தினாலும் — அங்கு இறைவன் இருக்கிறார். நற்செய்தியை ஆழ்ந்துபடித்துச் சிந்திக்கும்போது, கிறிஸ்துவே இந்தப் போராட்டத்தைச் சிறப்பு முறையில் தொடங்கி வைத்தார் என்பதை உணர்வோம். ஆதலின் திருச்சபையும் இதனைத் தொடர்ந்து நடத்தும் கடமையைப் பெற்றுள்ளது; போராட்டத்தினின்று ஒதுங்கி நின்றால், தன் கடமையினின்று நழுவிவிடுகிறது. கிறிஸ்துவின் இரக்கம், பரிவு அன்பைக் காண்பிப்பதோடு திருச்சபை தன் பணியைச் செய்துவிடுவதில்லை; கிறிஸ்துவின் நீதியில் தோய்ந்த பகைமையற்ற புரட்சியை மனித குலத்தில் தொடர்ந்து நடத்துவதும் அதன் கடமையுமாகும்.

ஆசியாவில் இலட்சக்கணக்கான கிராமங்களிற் கோடிக்கணக்கான மக்கள் அவல நிலையில் வாழ்கின்றனர். இக் கண்டத்தின் மாபெரும் நகரங்களில் தொழிலாளரும், கூலியாட்களும், வறுமையில் வாடுபவர்களும் மனிதத்தன்மையை இழந்து வாழ்க்கை நடத்துகின்றனர். இந்நிலைக்கு அடிப்படையான ஒரு காரணம்: அநீதி — மாநிலங்களுக்குள்ளே, நாடுகளுக்குள்ளே, நாடுகளிடையே உள்ள அநீதியும், பேராசையும்தான் கோடிக்கணக்கான நமது சகோதர சகோதரிகளை

இந்நிலையில் வைத்திருக்கிறது. அன்று இறைவாக்கினர் அநீதிகளைக்கண்டித்துக் கர்ஜித்தனர். இன்று திருச்சபைத் தலைவர்கள் ஒவ்வொரு நாட்டிலும், உலக அரங்கிலும் காணக்கிடக்கும் அநீதியையும் சுரண்டலையும் எதிர்த்துக் குரல் எழுப்பவேண்டும். நீதியின்றி வழிபடுதலில் அர்த்தம் இல்லை என்பதைத் தெளிவாய் எடுத்துரைத்தனர் இறைவாக்கினர். எந்த இறைவனை, எத்தகைய வழிபாட்டை எதிர்க்கின்றனர் நாத்திகர் என்ற ஆராய்ச்சி தவறான கருத்துக்களினின்று நம்மை விடுவிக்கும்.

**விவிலியமும் மார்க்ஸிய தத்துவமும் :**

இவற்றினிடையே ஒற்றுமை காணப்படுகிறது என்பதே பலருக்கு வியப்பை விளைவிக்கும். எனினும் இறைவனை மறுக்கும் மார்க்ஸும் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் விவிலியத்துடன் இணைந்த கருத்தை அழுத்திப் பேசுகிறார். விவிலியத்தின் வாக்கியங்கள் சிலவற்றை மார்க்ஸின் வார்த்தைகளுடன் நேருக்கு நேர் ஒப்பிட்டுப் பார்ப்பது அல்ல நமது எண்ணம். மாறாக, மனிதனைப்பற்றிய ஓர் அடிப்படைத் தத்துவத்தை நோக்குகின்றோம். பொருளாதாரத்தின் மூலம் மனிதன் மனிதனை அடக்கி ஆள்வதையும், இன்னும் இந்த நிலையை 'இயற்கை' என்று ஏற்றுக் கொள்வதையும், இறைவழிபாட்டினால் அநீதங்களை மூடிவைக்க விழைவதையும் விவிலியமும், மார்க்ஸும் ஒரே குரலிற் கண்டிக்கின்றன.

பொருளாதாரத்தில் உயர் வாழ்வு எய்தியுள்ள மேற்கு உலகு—பரம்பரையாகக் ''கிறிஸ்துவ நாடுகள்'' என்ற பெயரில் பெருமை கொண்ட நாடுகள்—உலகம் முழுவதும் நாகரீகப் பூச்சு நிறைந்த அடக்குமுறைகளை உருவாக்கிவிட்டன. மார்க்ஸோ விவிலியமோ விடும் சவாலை அவை சமாளிக்க இயலாது. இரண்டையும் எதிர்க்கின்றன; மறுக்கவும் செய்கின்றன; மார்க்ஸின் தத்துவங்களிற் குறைகள் காண்கின்றன; விவிலியத்தை அன்றாட வாழ்வுக்கு அர்த்தமற்றதாகக் கருதுகின்றன.

விவிலியத்தின் சில பகுதிகள் அநீதிபுரிவோரை எவ்வளவு கடுமையாகத் தாக்குகின்றன என்பது பல கிறிஸ்துவர்கட்குப் புதுச் செய்திபோல் இருக்கும். நடைமுறையில் திருச்சபையில் இதுவரை அவற்றிற்கு அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை. சங்கீதங்களில் சில, இறைவாக்கினரில் சிலர் வழிபாடு—நீதி இணைப்பைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறுவதைச் சிந்தித்தல் நலன் பயக்கும்.

இசையாஸ் *1:12—17, 23/3 : 14, 15/10 : 1, 2/58 : 1—12* '' உன் தலைவர் பிரமாணிக்கமற்றவர்கள், திருடர்களுக்குத் தோழர்களாய் இருக்கிறார்கள்; ஒவ்வோருவனும் கையூட்டுவாங்க ஏங்குகிறான்; அன்பளிப்புகளைத் தேடி ஓடுகிறான்; திக்கற்றவர்களுக்கு அவர்கள் நீதிவழங்குவதில்லை, கைம்பெண்களின் வழக்கைத் தீர்ப்பதுமில்லை.'' *(1 : 23)*

எரேமியாஸ்:

'' தாவீதின் வீடே, ஆண்டவர் கூறுகிறார்:

காலை நேரத்திலேயே நீதி செலுத்துங்கள், கொள்ளையடிக்கப்பட்டவனை ஒடுக்குபவன் கையினின்று விடுதலை செய்யுங்கள்.'' *(21 : 12)*

'' ஆண்டவர் கூறுகிறார்: நீதியையும் நேர்மையையும் கடைப்பிடியுங்கள்: ஒடுக்குகிறவன் கையினின்று இடுக்கண் படுகிறவனை விடுதலை செய்யுங்கள்.'' *(22 : 3)*

ஆமோஸ்— *2 : 6 — 8 / 4 : 1 — 2 / 5 : 10 — 12, 21—24*

'' நீங்கள் ஏழைகளை நசுக்கி அவர்களிடம் தானிய வரி வாங்கி, அதைக் கொண்டு செதுக்கிய கற்களால் வீடுகள் கட்டினீர்கள். அந்த வீடுகளில் நீங்கள் வாழப் போவதில்லை.'' *(5 : 10)*

'' உங்கள் திருவிழாக்களை அருவருக்கிறோம்; உங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் நமக்கு விருப்பமே இல்லை . . . . உங்கள் பாடல்களின் பண்ணை நம்மிட

மிருந்து அகற்றுங்கள், உங்கள் வீணைகளின் இசையை நாம் கேட்கமாட்டோம். அதற்கு மாறாக, நீதி தண்ணீரைப்போல வழிந்தோடட்டும். நேர்மை நீரோடையைப்போலப் பாயட்டும்.'' (5 : 21, 23, 24)

மிக்கேயாஸ் 6 : 6 – 8. சங்கீதங்கள் 5, 9, 10, 72, 110 இன்னும் பல.

19ஆம் நூற்றாண்டில் மார்க்ஸ் கூறிய கருத்தின்படி மனித வரலாற்றின் முற்பகுதி தற்போது முற்றுப் பெற்று விட்டது. உண்மை வரலாறு இப்போதுதான் தொடங்கியுள்ளது. புதுமனிதன் உருவாதல் வேண்டும். அவன் உருவாகிக் கொண்டேயிருக்கிறான். விவிலியத்தில் புதிய ஏற்பாட்டில் – நாம் படிப்பது :

''உண்மையாய் ஏற்படும் நீதியிலும் புனிதத்திலும் கடவுள் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்துகொள்ளுங்கள்'' (எபேசியர் 4 : 24)

''விருத்தசேதனமும் ஒன்றுமில்லை. விருத்தசேதனமின்மையும் ஒன்றுமில்லை. புதிய படைப்பாவதே முக்கியம்'' (கலாத்தியர் 6 : 15). ''ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால், புதியதொரு படைப்புத் தோன்றுகிறது ; பழையன கழிந்து போயின. இதோ ! புதியன தோன்றியுள்ளன'' (2 கொரிந்தியர் 5 : 17).

புதிய மனிதனை உருவாக்க விழைந்த மார்க்ஸ் கனவுகண்டவர் என்றால், விவிலியமும் கனவுகாணும் நூல்தான். ஆனால் வேறுபாடு நமக்கு வெளிப்படை. கனவுகளை நனவாக்கக் கூடியவர் இறைவன். அவரது அருளின் மூலந்தான் புதிய மனிதன் உருவாதலை நாம் எதிர்நோக்குகிறோம்.

**ஒத்துழைப்பு — நன்றி — எதிர்ப்பு :**

அநீதங்களை எதிர்த்துப் போராடும் குழுக்கள் பல உள்ளன. அவற்றுடன் ஒத்துழைக்கவும் வாய்ப்புக்கள் திருச்சபை அதிகாரிகட்குக் கிட்டும். அத்தகைய குழுக்

களின் எல்லாவித தத்துவங்களையும் ஏற்றுக்கொள்ளாத போதிலும், நீதியை நிலைநாட்டுவதில் அவற்றிற்குப் பக்கபலமாகத் திருச்சபைநின்ருல், பொதுமக்கள் நலம் எய்துவர்.

ஆசியாவில் மேல்நாட்டினரது அரசியல் ஆதிக்கம் முடிந்துவிட்டது. ஆனுல் புதுரகப் பொருளாதார ஆதிக்கம் வளர்ந்துவருவதை நாம் அறிவோம். ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியாவில் உள்ள ஆயிரக்கணக்கான நல்ல மனிதப்பிறவிகள் வறுமையில் வாடும் ஆசிய மக்கள்மீது பரிவுகொண்டு பணமோ, பொருளோ அனுப்பிவைக்கின்றனர். இந்த நன்கொடைகளுக்காக நம் ஆயர்களும், பல நிறுவனங்களின் தலைவர் தலைவிகளும் நன்றி கூறுகின்றனர். அத்துடன் நின்றுவிடுதல் தவறு. மேல்நாட்டு, ஆஸ்திரேலிய அரசுகள் உண்மையான கிறிஸ்துவ நீதியைக் கடைப்பிடிப்பதில்லை. கடந்த 400, 500 ஆண்டுகளாக மேற்கத்திய வல்லரசுகள் ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க மக்களுக்கு இழைத்துள்ள தீமைகட்கு எவ்வளவோ பரிகாரம் செய்யவேண்டியிருக்கிறது. இன்றும், தங்கள் ஆயுத உற்பத்திக் கொள்கையினுல் எளிய நாடுகளை அவை வறுமையில் அழுத்தி வைத்திருக்கின்றன. உலக அரங்கில் வாணிபத்துறையில் அந்தக் ‘கிறிஸ்துவ’ அரசுகள் செய்துவரும் அநீதங்கள் பல. ஆசிய கிறிஸ்துவச் சபைத் தலைவர்கள் நீதியைக் கடைப்பிடிக்க மேற்கு உலகைத் தூண்டவேண்டும். அந்த நாடுகள் மூலம் உலகில் உலவும் பொருளாதார அநீதங்களைச் சுட்டிக்காட்டத் தயங்கலாகாது. இது அரசியல்–ஈடுபாடு என்று வாளாவிருந்துவிடச் சோதனை எழத்தான் செய்யும். இச் சோதனையை மேற்கொள்ளக் கிறிஸ்துவின் துணிவும் அருளும் தேவை என்பது தெளிவு.

**திருச்சபைக்கும் நற்செய்தி தேவை:**

நற்செய்தியை இன்னும் கேளாதவர்கட்கும், அல்லது இறைவாக்கென அதை ஏற்காதவர்கட்கும் திருச்சபை அதனை எடுத்துரைப்பதே நற்செய்திப் பணியாகும். அதன் இறுதிக் குறிக்கோள் இறை அரசை நிறுவுதலாகும். ஒரு சமுதாயத்தில் திருச்சபையை நாட்டுதலையும், இறை அரசை நிறுவுதலையும் பிரித்து உணர்தல் தேவை.

திருச்சபையை ஒரு நிறுவனமாகக் கருதினுல், உறுப்பினரின் எண்ணிக்கையும், அவர்களின் பணிகளும் பெருகும்போது திருச்சபை வளர்ச்சி அடைகின்றது என்று கூறுகின்ருேம். ஆனுல் எந்த அளவுக்கு நற்செய்தியின் சாரத்தையும், மதிப்பீடுகளையும் தன் உள் – உயிருடன் இணைக்கின்றதோ, அந்த அளவுக்குத் திருச்சபை தெய்வீகச் சக்தியைப் பெறுகின்றது. காணக் கூடிய திருச்சபை இறையரசின் ஒரு பகுதிதான்.

ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவ சபைகளில் சேர்வோர் உண்டு. குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தில் அத்தகையவரின் எண்ணிக்கை சிறிதாக இருக்கலாம். ஆனுல் அந்தச் சமுதாயத்தில் மனித உறவுகளும் மதிப்பீடுகளும் கிறிஸ்துவ மயமாகி இருந்தால், நற்செய்திப் பணி அங்கு ஓரளவு வெற்றி பெற்றுள்ளது என்று கூறலாம். நீதியும் அன்பும் ஒரு சமுதாயத்தில் எவ்வளவு வளர்ந்துள்ளது என்பதுதான் நற்செய்திப் பணியின் வெற்றியை எடுத்துக்காட்டும் அளவுகோலாகும்.

தற்போதைய கிறிஸ்துவச் சபைகள் நற்செய்திக்கு முழுவதும் எடுத்துக்காட்டாக உள என்று யார்தான் கூறுவர்? எளிமையும் தூய்மையும், நீதியும் அன்பும் சபைகளின் சாமானிய உறுப்பினருக்கும் அதிகாரிகட்கும் இன்னும் எவ்வளவோ தேவைப்படுகின்றது! கிறிஸ்து தரும் நற்செய்தி வாழ்வை இவர்கள் ஏற்ருல், சபைகளின் நிர்வாகமும், பணிமுறைகளும், வழிபாடும்

விரைவாகவும், ஆழமாகவும் மாற்றம் பெறும்; சபைகளில் கிறிஸ்துவ சுதந்திரம் மிளிரும். நற்செய்தியினுல் என்றும் மாற்றப்பெறும் திருச்சபையே உலக சமுதாயங்களின் உப்பாகவும் ஒளியாகவும் இருக்க இயலும்.

**வரலாற்றுப் புரட்சிகளும் திருச்சபையும்:**

கடந்த 200 ஆண்டுகளுக்குள் நான்கு பெரும் புரட்சிகள் ஏற்பட்டுள்ளன. பிரஞ்சுப் புரட்சி—1789. தொழிற் புரட்சி 19ஆம் நூற்ருண்டு முழுவதும். ரஷியப் புரட்சி—1917. சீனப்புரட்சி–ஏறத்தாழ 1940லிருந்து இன்னும் நடைபெறுவது எனலாம்.

அமைதியான சூழலில் வாழ விரும்பும் திருச்சபையும், அதன் அதிகாரிகளும் புரட்சிகளையும், ஏன் மாற்றங்களையும்கூட சாதாரணமாக விரும்புவதில்லை. சமூகங்கள் கொந்தளித்து எழும்போது வன்முறைச் செயல்களும், கொள்ளை, கொலை முதலிய வேறு அக்கிரமங்களும் நடக்கத்தான் செய்கின்றன. ஆனுல் அந்தக் கொந்தளிப்புகளின் அடித்தளத்தில் மனிதத் தன்மையின் உணர்வுகளும், ஏக்கங்களும் நிறைய இருக்கின்றன; இவை அமைதியான வழிகளில் நிறைவு பெற இயலாமல், சமுதாயங்களையும் நாடுகளையும் உலுக்கி, ஆட்டிவைத்து ஓரளவு வெற்றி பெறுகின்றன; ஓரளவு கலக்கத்தையும், அச்சத்தையும் நீடிக்கவும் செய்கின்றன. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பிரஞ்சுப்புரட்சியின் விருதுவாக்குப்போல் அமைந்தது. தொழிலாளர் முதலாளித்துவ முறைகளினுல் நசுக்கப் படலாகாது; மனிதப் பிறவிகட்குரிய நீதியும் மதிப்பும் அவர்கட்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது தொழிற்புரட்சி, ரஷ்யப் புரட்சியின் நல்ல அம்சங்கள் எனலாம். ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற்று, தனது சொந்தப் பாணியில் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பது சீனப் புரட்சியின் சிறப்புக் கொள்கை.

**புரட்சிகளில் புதைந்த மனித ஏக்கங்கள்:**

வன்முறை, சண்டை, கொள்ளை, கொலைகளுக்கிடையே இந்தப் புரட்சிகளிற் புதைந்திருந்த மனித ஏக்கங்களைத் திருச்சபை அதிகாரபூர்வமாக ஏற்பதற்குப் பல ஆண்டுகள் பிடித்தன. 19ஆம் நூற்றுண்டில் ஐரோப்பியத் தொழிலாளருடைய பிரச்சினைகளைத் திருச்சபை ஆயர்கள் பலர் அலட்சியம் செய்தனர். உழைப்பாளிகட்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டும் அவர்கள் சார்பாகக் குரல் எழுப்பவில்லை. இதனைக் கண்ட எளிய மக்கள் திருச்சபை முதலாளித்துவப் பணக்காரர் பக்கந்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வந்தனர். ஏழைத் தொழிலாளருக்கு வேதமே பொருளற்றதாகத் தோன்றியது. கோவில்கள் பல காலியாகக் காட்சியளித்தன. 1891ஆம் ஆண்டு 13ஆம் சிங்கராயர் விடுத்த 'ரேரும் நொவாரும்' எனும் சுற்றுமடலை 50ஆம் ஆண்டுகட்கு முன்னதாகவே வேறு பாப்பரசர் விடுத்திருந்தால், அது உண்மையில் அன்றைய தொழிலாளர் சாசனமாகத் தோன்றியிருக்கும். ஆனுல் 1891இல் கூட பல ஆயர்களுடைய மனப்பான்மை மாறவில்லை. திருச்சபைக்கும் தொழிலாளருக்குமிடையே ஏற்பட்ட பிளவின்மீது பாலம் எழவில்லை.

**இறைக்கட்டளைகளைப் புரிந்துகொள்ளுதல்:**

கற்பு, பால்-உணர்வு, திருமணவாழ்வின் விவரங்களைப்பற்றி ஒழுக்க இறையியல் வல்லுநர் எழுதியுள்ள, எழுதிவரும் நூல்கட்குக் குறைவில்லை. சமுதாயத்தைப் பற்றியும், அகில உலக உறவுகள்பற்றியும் இறையியல் ஆராய்ச்சி சொற்பம்தான். குருத்துவப் பயிற்சியிலும், மேய்ப்புப் பணியிலும் 6ஆம், 9ஆம் கட்டளைகளைப் புரிந்துகொண்டு, போதிப்பதற்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. சமுதாய வாழ்வில் உள்ள உறவுகளை விளக்கும் 5ஆம், 7ஆம், 8ஆம், 10ஆம் கட்டளைகளைப் பற்றிய அறிவும், போதனையும் போதிய அளவில் வளர்ச்சி பெறவில்லை.

**5ஆம் கட்டளை :** கிறிஸ்துவக் குடியேற்ற நாட்டவர் வட, தென் அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் பழங்குடி மக்களை அழித்தபோதும், அண்மையில் அமெரிக்கர் இலட்சக்கணக்கான டன் நிறையுள்ள குண்டுகளை வீசி வியட்நாம் மக்களைப் பாழாக்கிய போதும், கிறிஸ்துவ இறையியல் சிந்தனையாளர் "கொலை செய்யாதிருப்பாயாக" என்பதைப்பற்றி மனச்சாட்சிப் பிரச்சினையை எழுப்பிடவில்லை. 'கிறிஸ்துவ' நாடுகளில் எத்தனை இலட்சக்கணக்கான மக்கள் ஆயுத உற்பத்தியில் வேலை செய்கின்றனர்! அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டும் ஆண்டு மொத்தச் செலவாகிய 8000 கோடி டாலரில் 30% 'தற்காப்புக்காக' ஒதுக்கப் படுகிறதாம். தனி மனிதர் அல்லது சிறு குழுக்கள் பகைமையை வளர்த்துச் சண்டையிட்டு நாசவழியில் செல்லும்போது 5ஆம் கட்டளையை வைத்து அறிவுரை கூறுகின்றனர் போதகர்கள். ஐரோப்பிய, அமெரிக்கக் கூட்டணியோ, சோவியத் பொதுவுடைமைக் கூட்டணியோ ஆபிரிக்காவிலும், மேற்கு ஆசியாவிலும் அழிவுப்பாதையில் பிறநாடுகளை இழுக்கும்போது, 5ஆம் கட்டளை சிறிது மங்கிவிடுகின்றது.

**8ஆம் கட்டளை :** 'பொய் சொல்லாதிருப்பாயாக." விளம்பரக்கலை பொய்கள் உளுத்துப்போன கலையல்லவா? எத்தனை கிறிஸ்துவ நாடுகள் இதில் தேர்ச்சி பெற்றுள்ளன! உணவு, உடை, இல்லம், விளையாட்டு, பால்-உணர்வு, புதுப்புது 'ஃபாஷன்கள்' இவற்றைப் பற்றிய விளம்பரங்கள் எத்தனை 'பொய்ச் சாட்சி' பகர்ந்துகொண்டேயிருக்கின்றன. அதே சமயத்தில் சாமானிய ஐரோப்பிய அமெரிக்க மக்களுக்கு அவர்களது அரசுகள் பொருளாதாரத் துறையில் இன்று எளிய நாடுகளிற் புரிந்துவரும் அக்கிரமங்களைப் பற்றிய உண்மையை எடுத்துரைப்பவர்கள் இல்லையே!

பலநாட்டு மொத்த-வாணிகர் பலத்த பொய்களைப் பரப்பி, மக்களைப் பசப்பி, அவர்கட்குத் தேவையற்ற

பல பொருட்களை வாங்க வைத்துவிடுகின்றனர். எளிய நாட்டுப் பணக்கார மக்களைத் தங்களுக்கு உடந்தையாக்கிக் கொள்கின்றனர். எளிய நாடுகளில் போலி நாகரீகத்தின் மீது ஒரு மோகத்தை உண்டுபண்ணிவிடுகின்றனர்; பேதைகளாகிய பல கல்லூரி மாணவ மாணவியர் இதற்குப் பலியாகின்றனர். அந்தப் பொய்ப்பிரசாரத்தை அம்பலப்படுத்தி, அதனை மேற்கொள்ள உதவுதல் இறையியலாளர், குருக்கள், ஆகியோரது முக்கிய கடமையல்லவா! எந்த அளவில் 8ஆம் கட்டளையைக் கடைப்பிடிக்கின்றோம்?

**7ஆம், 10ஆம் கட்டளைகள்:** "களவு செய்யாமல் இருப்பாயாக", "பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக!" சிறுச்சிறு தனித் திருட்டுகளைத்தான் கண்டித்துப் போதனை செய்கின்றனர் பெருவாரியான குழுக்கள். எளிய மக்களை இம்சித்து, அவர்களது தாதுப் பொருட்களையும் மரவளத்தையும் கொள்ளையடித்துள்ள, கொள்ளையடித்துவரும் பணக்கார நாட்டினரைப்பற்றிக் கிறிஸ்துவ ஒழுக்கஇயல் எத்துணைக் கவலை கொள்கிறது? வியாபாரத்திலும், ஏற்றுமதியிலும்—இறக்குமதியிலும் தங்கள் பணச்செருக்கையும், படைப்பலத்தையும் பயன்படுத்தி, இலாபத்தையே மையமாக வைத்து, எளிய நாடுகளை மறைமுகமாகக் கொள்ளையடிக்கும் பணக்காரக் கூட்டுறவுகள், சமுதாயங்கள், நாடுகள் ஆகியனவற்றைப்பற்றி இறையியல் என்னென்ன கேள்விகள் எழுப்பியிருக்கிறது?

"தனிச்சொத்துரிமை" எனும் கொள்கைக்கு நற்செய்திப் பண்பில் தோய்ந்த கிறிஸ்துவ விளக்கம் தேவையில்லையா? பிற நாடுகளின் உடைமைகளையும் உரிமைகளையும் மதியாத பணக்கார நாடுகள் தங்களுக்கு இயற்கையிற் கிடைத்துள்ள சொத்துக்களைத் தாங்கள் மட்டும் வைத்து அனுபவிப்பதில் என்ன கிறிஸ்துவ நீதி இருக்கின்றது?

கிறிஸ்துவ சகாப்தத்தில் முதல் நூற்றுண்டுகளில் புகழ்பெற்ற மறையுரையாளரின் கர்ஜனைகள் ஐரோப்பிய, அமெரிக்க மக்களுக்கும் பொதுவிற் பணக்காரரர் அனைவருக்கும் சரியாய்ப் பொருந்தும்.

"சொல், பார்ப்போம், எவ்வாறு பணம் படைத்திருக்கிறுய்? யாரிடமிருந்து உனக்குச் சொத்துக் கிடைத்தது? உன் சொத்தின் தொடக்கமும், வேரும் அநீதியில்தான் நிச்சயம் காணக்கிடக்கும்."

(கிறிஸோஸ்தோம்—திருவுரை–1 திமோத்.)

"உன் உடைமைகளைக் கொடையாக நீ ஏழைகட்குக் கொடுப்பதில்லை. அவர்கட்குச் சொந்தமானதைத்தான் திருப்பிக் கொடுக்கிறுய்."

(அம்புரோஸ்–நபுத்தா பற்றி)

"பிறர் உடைகளை எடுத்துக் கொள்பவனுக்குத் திருடன் என்று பெயரிடுகிறேம். உடையற்றவருக்கு உடை அளிக்க முடிந்தும், அளிக்காதவனுக்கும் அதே பெயரைத் தர வேண்டாமா? உன் அலமாரியில் உள்ள ரோட்டி பசியுள்ள மனிதனுக்குச் சொந்தம். உன் பழைய காலணிகள், பாதரட்சை அற்றவனுக்குச் சொந்தம். நீ குவித்து வைக்கிற பணம் ஏழைகட்குச் சொந்தம்."

(பாசில்—திருவுரைகள் - லூக்காஸ்)

**அருட்சாதனங்களும் - சமுதாயமும் :**

2ஆம் வத்திக்கான் சங்கம் முடிந்து 10 ஆண்டுகள் ஆகியும் கத்தோலிக்கப் பக்தி பெருமளவு பழமைக் காட்சியாகவே தோன்றுகிறது. தமிழகத்திற் பெருவாரியான கோவில்களில் சுருபங்கள், மலர்மாலைகள், மெழுகுவர்த்திகள், நவநாட்கள், பவனிகள் மலிந்து தான் இருக்கின்றன. வெளிச்சின்னங்கள் தேவை என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனல் மறையின் உட்பொருளை மறந்துவிட்டால், நாம் புதுமைகளையும் போலி நிறைவையும் தேடுவோராக மாறிவிடுகிறேம். இறைவனேடும் மாதாவோடும் பேரம் பேசும் பக்தர்களாக மாறிவிடுகிறேம்.

உண்மை மறை தனி நபரையும் சமுதாயத்தையும் இறைவன்பால் ஈர்க்கும் உறவு; அந்தக் காரணத்தினுலேயே மனிதரை ஒருவர் ஒருவரோடு இணைக்கும் உறவு.

இயேசு நிறுவிய அருட்சாதனங்கள் நடைமுறையில் எவ்வாறு இந்த உறவுகளைத் தொடங்கி வளர்க்கின்றன என்பதைப்பற்றி ஆய்வுசெய்தல் ஆயர்களின், அதிகாரிகளின் பொறுப்பு. அருட்சாதனங்கள் சமுதாய உறவுகளை வளர்க்கக்கூடும் என்பதைப்பற்றிச் சிந்தித்துச் செயற்படுதல் தேவை.

ஞானஸ்நானம் என்பது ஏதோ பெயரிடும் கிறிஸ்துவச் சடங்கு, ரெஜிஸ்டரில் பதிவு செய்யும் முறை என்று இருத்தலாகாது. கிறிஸ்துவ சபையின் எண்ணிக்கை பெருகுவதற்கு முக்கியத்துவம் அளித்தல் தவறு. மாருக இறைமக்கள் மனித சமுதாயத்தில் உப்பைப்போலவும், ஒளியைப்போலவும் சுவையையும், நிறைவையும் தருபவர்களாக இருக்கவேண்டும் என்பதை உணர்த்தும் அருட்சாதனமாக மேன்மேலும் மாறுதல் தேவை.

பாவ அறிக்கை: நம்மில் ஒவ்வொருவரும் சமூகப் பாவங்கட்கு எதுதுணை உடந்தையாயிருக்கிருேம் என்பதை உணர்த்த வேண்டும். எப்போதும் இரகசியமாகக் குருவின் காதில் பாவங்களை ஓதிவிட்டு வந்துவிடுதல் ஏறத்தாழ எல்லாப் பாவங்களிலும் சமூகத் தொடர்பு சிறிதளவாவது இணைந்துளது என்பதை மறைத்துவிடுகின்றது. இந்த அருட்சாதனத்தின் மூலம் பங்குமக்கள் ஒரு சமூகமாக இறைவன் பக்கம் மனந்திரும்பி, நீதியிலும் அன்பிலும் வளரக் கற்றுக்கொள்ளக்கூடும். இதை உணர்த்தக்கூடிய பொது பக்தி முறைகளை உருவாக்குதல் தேவை.

உறுதிப்பூசுதல்: பொதுவில் அர்த்தமற்ற வழியில் வழங்கப்பட்டுவரும் அருட்சாதனம் இது. தங்கள் கடமையை முடித்துவிடும் கருத்துடன் பெற்ருேர்

சிறுவர் சிறுமிகளைக் கோவிலுக்கு அனுப்பிவைக்கின்றனர். இவ்வுலகில் கிறிஸ்துவுக்குச் சாட்சி கூறுவது என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ள இயலா வயதில் இவர்கள் தூய ஆவியைப் பெறுகின்றனர். பக்தி, தூய்மை, கீழ்ப்படிதல் போன்ற பண்புகளைத் தான் அந்தச் சிறுவயதில் அவர்களுக்கு உணர்த்த முடியும். இந்த அருட்சாதனத்தை 16 – 18 – 20 வயது வரை தள்ளிவைத்தல் எவ்வளவோ நன்மை பயக்கும். கிறிஸ்துவின் சீடர் கிறிஸ்துவின் நீதிக்கும் அன்புக்கும் சமுதாயத்தில் சான்று பகர்வது யாது என்பதை ஆழமாக உணர்ந்து, தூய ஆவியை ஆவலுடன் பெற்றுக் கொண்டால், அப்போஸ்தலரைப்போல் கிறிஸ்துவை உலகுக்கு அறிமுகப்படுத்தி வைப்பார்கள் அல்லவா!

திருமணம்: இருவருடைய இன்பம், மகிழ்ச்சி, அன்பு, பிரமாணிக்கம் ஆகியனவற்றையும், அவர்கள் பெற்றெடுக்கும் பிள்ளைகளின் கிறிஸ்துவ வளர்ச்சியையும் மக்களுக்கு அறிவுறுத்தும் அருட்சாதனமாகத் தோன்றுகிறது. சமுதாயத்தின் சிறு அணுப்போன்ற குடும்பத்தின் பொறுப்பு யாது? சமூக வளர்ச்சி, சமூக நீதிக்குக் கிறிஸ்துவ குடும்பம் கோணரும் சிறப்புக் கோடைகள் யாவை? போட்டி மனப்பான்மையினால் உந்தப்பட்டு தங்கள் குடும்பங்களின் பொருளாதாரச் செல்வாக்கையே கணித்துச் செயற்படும் கிறிஸ்துவத் தம்பதிகள் எத்தனை பேர்! தன்னலத்தினால் அல்ல, ஆனால் தங்கள் பிள்ளைகள் இவ்வுலகில் செல்வாக்குடன் வாழவேண்டும் என்பதற்காகத்தான் பாடுபடுகிறோம் என்று கூறும் பெற்றோர் எத்தனை பேர்! இந்தக் கேள்விகளும், மன நிலைகளும் திருமணம் நடைமுறையில் சிறிது விரிந்த தன்னலத்தையே பரப்புகின்றது என்பதை உணர்த்துகின்றது. இந்த அருட்சாதனம், கிறிஸ்து – திருச்சபையின் மறைபொருளைக் குறிக்கின்றது என்கிறோம். கிறிஸ்துவத் திருமணம் சமுதாயத்தில் ஏனைய திருமணங்களை விடத் தியாகத்தையும் அன்பையும் அதிகமாக வளர்க்கின்றதா?

நற்கருணை: பலரது வாழ்வில் ஞாயிறு பூசைக் கடமையுடன் மறைந்துவிடுகிறது இந்த அருட்சாதனம். முதல் நூற்றுண்டில் சின்னப்பர் கண்டித்த தற்பெருமை பல ஆலயங்களில் வேறு உரு எடுக்கின்றது. அக்காலத்தில் உணவில் தற்பெருமை — இக்காலத்தில் உடையில் செருக்கு, அல்லது சுருக்கம் எனலாம். வீண் ஆடம்பரங்களும், 'ஃபாஷன்' என்ற புனைபெயரில் டாம்பீகமும் ஞாயிறு பூசையை ஒட்டிச் சில ஆலயங்களில் நர்த்தனம் புரிகின்றன. பொது நிலையினர் பலர் தங்கள் கடமையை ஒவ்வொரு ஞாயிறும் முடித்துவிடுவதுபோல், குருக்களும் தங்கள் கடமையை சனி, ஞாயிறுகளில் முடித்துவிடுகின்றனர். சமுதாய, உளநூல் ஆராய்ச்சி இத்துணை முன்னேறியிருக்கும் இந்நாட்களிற் கூடப் பொறுப்புணர்ச்சியோடு ஞாயிறு பூசையைப்பற்றிய ஒரு சீர்திருத்தத்தை மேற்கொள்ளத் திருச்சபை அதிகாரிகள் தயாராக இல்லைப்போலும். ஏதோ ஒரே நாளிற் பலதரப்பட்ட, நூற்றுக்கணக்கான மக்களை ஒருங்கே ஒருமணிநேரம் இழுத்துப்போட்டுக் கடமையை முடித்துவிடுவது பழக்கமாகிவிட்டது. வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கிறிஸ்துவின் உயிர்தரும் வார்த்தைகளிற் சிந்தித்துத் தெளிவுபெறவும், அவரது அன்புப்பலியில் இணைந்து உலகை அவருடன் மீட்கக்கூடிய ஆர்வம் பெறவும் தற்போதைய ஞாயிறு பூசை சூழ்நிலை இடம் தருவதேயில்லை. பலப்பல சிறு-குழு பூசைப்பலிகள் தேவை; ஞாயிறு தவிர் ஏனைய நாட்களிலும் 'கடமையை' முடிக்கக்கூடிய அனுமதி தேவை; சில குடும்பங்கள் இணைந்து, தங்கள் வட்டாரத்தில் நற்செய்திப் பணி புரிய அவர்களை உந்துவதற்கு இல்லங்களில் பூசைப் பலிகள் தேவை. எளிதிற் சொல்லிவிடலாம், செயற்படுவதில் பிரச்சினைகள் பல எழும். எனினும் தவறுகளுக்கு அஞ்சிப் பழைய பாணியிலேயே நகர்ந்தால், பல அரிய வாய்ப்புகளை இழந்து, எதையும் சாதிக்க இயலாத நிலையிலேயே இருப்போம்.

**ஆசிய மக்களிடையே ஆயர்கள்:**

ஆயர்களே திருச்சபையின் சிறப்புப் பிரதிநிதிகளாக உலகெங்கும் கருதப்படுகின்றனர். ஆசிய மக்கள் பரம்பரையாக அதிகாரிகளுக்குக் காட்டும் பணிவும், மரியாதையும் ஆயர்களுக்குக் கிட்டுகின்றது. அவர்க்ளிடமிருந்து மறை வாழ்விலும், மனித முன்னேற்றத்திலுங்கூட தலைமைப் பண்புகளை எதிர்நோக்குகின்றனர்.

பல குழுக்களின் ஆலோசனைகளை ஆயர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று 2ஆம் வத்திக்கான் சங்கம் பரிந்துரைத்துள்ளது. நவீன உலகின் சிக்கலான பல பிரச்சினைகளுக்கு இத்தகைய வழி மிகமிகத் தேவை என்பதை உணர்த்தியுள்ளது.

**அலாதியான ஆன்மீகப் பிரச்சினைகள்?**

'இன்றைய உலகில் திருச்சபை' எனும் அறிக்கை நமது ஆயர்களை ஆசிய உலகினுள் கிறிஸ்துவின் மனநிலையுடன் நுழைய அழைக்கின்றது. ஆசியாவில் உள்ள சமுதாயப் பிரச்சினைகள் அதிர்ச்சிதரக்கூடியவை. ஆனல் ஆழ்ந்து சிந்திக்குங்கால் அலாதியான ஆன்மீகப் பிரச்சினைகள் என்றும் இல்லை, வெறும் சமூகப் பிரச்சினைகள் என்றும் இல்லை. இவை ஒன்ருேடொன்று இழையோடி நிற்கின்றன. திருச்சபை அதிகாரிகளுக்கும், பணியாளருக்கும் பொருளாதாரம், சமூக இயல், அரசியல் ஆகிய துறைகளிற் பயிற்சி தேவைப்படுகின்றது.

**தவருத சாட்சிகள் உண்டோ?**

சிறுவர் — சிறுமியர் மறைக்கல்வி, இறைவழிபாடு, திருமணச் சட்டங்கள் ஆகியனவற்றிற் பயிற்சி பெறுவது மட்டும் குருக்களுக்குப் போதாது என்பதை நமது ஆயர்கள் மனமார ஏற்கவேண்டும். சில குருக்களும், துறவியரும் சிறப்புப்பயிற்சி, தங்கள் மனவலிமை, தனிக்கொடைகள் ஆகியன மூலம் சமூகப் பிரச்சினைகளில் ஈடுபட விழைகின்றனர். இதனைத் திருச்சபை அதிகாரிகள் வரவேற்பது முக்கியம்.

அவர்கள் செய்யக்கூடிய தவறுகளைப் பெரிதுபடுத்தாது, சமுதாயத்தில் கிறிஸ்துவின் நீதிக்கு அவர்கள் சாட்சிகளாக இருக்க எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும்.

**ஒரே கிறிஸ்துவுடன் இணைந்துள்ள பல திருச்சபைகள்:**

ஒரே கத்தோலிக்கத்தில் ‘திருச்சபைகள்’ பல உண்டென்ற உண்மையை மறையியல் வாசனை பெற்ற யாவரும் ஏற்றுக்கொள்வர். இந்தக் கண்ணோட்டத்தில் எங்கும் எல்லாம் ஒரே மயமாக இருக்கவேண்டும் என்ற விருப்பம் உருவாகாது. உரோமை அதிகாரிகள் விடுக்கும் சுற்றறிக்கைகளும், வினுக்களும் ஆசியச் சூழ்நிலைக்கு எவ்வளவு பொருந்தும் என்று தெரிவிக்க ஆசிய ஆயர் குழுக்கட்கு உரிமை உண்டு. நிர்வாகப் பழுவை அதிகரிக்கும் சிறு விவகாரங்களையும், சட்ட நுட்பங்களையும் அகற்றி, தங்கள் திறன்கள், நேரம், பலம் அனைத்தையும் மறைபரப்பும் பணிக்கும், நீதியை நிலைநாட்டும் பணிக்கும் அர்ப்பணிப்பது ஆசிய திருச்சபைகளின் உரிமைகளில் ஒன்றாகும்.

**தொடக்கத் திருச்சபையின் மரபுகள்:**

இன்றைய ஆசியாவில் திருச்சபை பிரசன்னமாயிருக்க வேண்டுமாயின், ஆயர்களைத் தெரிந்தெடுக்கும் முறையைப்பற்றியும் சிந்தித்தல் வேண்டும். ஏனைய தகுதிகளுடன், இன்றைய சூழ்நிலையில் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோருடன் இதய ஒன்றிப்பையும் கொண்டவர்கள் தேவை. இவர்கள் மட்டும் தங்கள் எளிய வாழ்க்கைப்பாணியில் கிறிஸ்துவை எல்லா மறையினருக்கும் பிரதிபலிக்கக் கூடியவர்கள். சந்நியாசத்தைப் போற்றும் ஆசியாவில் எவ்வித ஆடம்பர வாழ்வும் இறை அரசு பரவுதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும். திருச்சபையின் தொடக்கத்தில் இருந்ததுபோல் குருக்கள், பொதுநிலையினர் அனைவருக்கும் ஆயர்களைத் தேர்ந்தெடுத்தலில் பங்கு

தருதல் பெரும் பயனளிக்கும். நிரந்தரமாக ஆயர் ஆட்சிப் பீடத்தில் அமர்வது சாதாரணமாகத் திருச் சபைக்கோ, ஆயர்கட்கோ நல்லதல்ல; முக்கியமாகப் பாதிக்கப்படுபவர்கள் குருக்கள். இவர்கள் இப்போதைய அமைப்பில் பொருளாதாரத்தை ஒட்டிய வரையில் முழுவதும் ஆயர்களை நம்பி யிருப்பவர்கள். இக் குருக்களது நலன்தரக்கூடிய சுதந்திரமும், தனிமுதல் முயற்சிகளும் பெரிதும் கட்டுப்படுத்தப் படுகின்றன. தங்கட்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என்று துணிச்சலுடன் செயல்பட முனைவோரை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆயர்பதவிக்கு இப்போது இருக்கும் 75 வயது உச்சநிலை மிகமிக உயர்ந்தது. தலைமைப் பணிபுரியும் வாய்ப்பைப் பல இளங்குருக்களிடமிருந்து அது பறித்துவிடுகிறது.

நமது ஆசிய ஆயர்கள் மிகக் கடினப் பொறுப்பை ஏற்றுள்ளனர். அவர்கட்குக் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகியோரது ஒத்துழைப்பும், அனுதாபமும் அதிகம் தேவைப்படுகின்றது. இவற்றைப் பெற்று, 'ஆன்மமீட்பை' பரந்த அளவில் தெளிந்து, மறைபரப்பு—நீதிப்பணியில் அவர்கள் வழிகாட்டினால், அவர்களுக்குள்ள ஆன்மீகச் செல்வாக்கு நம் மக்களுக்கு ஒரு புதிய வாழ்வைப் பெற்றுத் தரும். சமூக அமைப்புகளை மாற்றாது மறைபரப்புப்பணி செய்தல் ஒருசில சூழ்நிலைகளிற் கூடாத காரியம்.

### நீதியைவிட அன்பு மேலானதல்லவோ?

உண்மைதான்! எனினும் நடைமுறையில், பல சூழ்நிலைகளில் அன்பு இரக்கமாக உருவெடுக்கின்றது. பிறர்மீது கருணையைக் காட்டும்போது, 'அன்பு' உயர்வு — மனப்பான்மையுடன் இழையோடியதாகத் தோன்றலாம். அன்பு என்பது கடமைக்கு அப்பாற் பட்டது என்பதால், சில சமயங்களில் கடமையும் கை நெகிழ்ந்து விடலாம்! ஆதலின் அன்பின் முதற்படியாகிய நீதியை அழுத்தமாகப் போதித்தல் அவசியம்.

**விபத்துக்கள் பல இறைச் செயல்கள் :**

விபத்துக்கள் நிகழும்போது இரக்கமும் அன்பும் கலந்த செயல்கள் தேவைப்படுகின்றன : தீ, வெள்ளம், நிலநடுக்கம் ஆகியன மக்களைப் பாதிக்கும்போது, திருச்சபை முன்னணியில் நின்று பணி செய்கின்றது. அதன் நிறுவனங்களில் பணி செய்வோர் விவாதமின்றி, தர்க்கமின்றி பாதிக்கப்பட்டவர்கட்குப் பாதுகாப்பு அளிக்கின்றனர். தற்காலிகப் பணிகளில் அநீதியைப் பற்றிப் பேச்சு எழுவதில்லை. ஏனெனில், பெருவாரியாக அத்தகைய விபத்துக்களை இறைச் செயல்கள் என்று கூறிவிடலாம்.

**அநீதங்கள் அனைத்தும் மனிதனுல் உருவானவை :**

மாருக, அந்தச் சூழல்களில் துன்புறும் மக்கள் ஏதோ விபத்துநிலையில் இல்லை. இறைச்செயல்கள் கொணரும் சோதனைகளுக்குப் பலியானவர்கள் அல்ல இவர்கள். மனித சமுதாயம் அல்லது சில நபர்கள் உருவாக்கும் அவல நிலைக்குப் பலியானவர்கள். சமயா சமயங்களில் இவர்கள் மீது இரக்கம் கொண்டு, இவர்கட்கு உணவு, உடை முதலியன அளிப்பதால் இவர்களது அடிப்படைப் பிரச்சினைகளை நாம் தீர்த்து விடுவதில்லை. அநீதத்தின் காரணங்களை ஆய்ந்து, தெளிந்து அவற்றை நீக்க முயல்வது மிகக் கடினம். பலமும், செல்வாக்கும் உள்ள பலரது கோபத்துக்கும், பழிவாங்கும் மனப்பான்மைக்கும் நாம் ஆளாவோம். எனினும் இப்பணியில் பின்வாங்குதல் கோழைத்தனம் ஆகும். அநீதத்தின் காரணத்தால் அவல நிலையில் உள்ள மக்கள் ஏங்குவது பிச்சைக்காக அல்ல—நீதிக்காகத்தான். நீதிமட்டும்தான் அவர்கட்கு மனித மதிப்பைப் பெற்றுத்தர முடியும்.

**திருச்சபையுடன் ஒத்துழைக்கும் நீதியற்றோர் :**

திருச்சபையின் போதனைகட்கும் செயல் முறைகட்கு மிடையே பிளவு தோன்றுகிறது. போதனையோ

முழு நீதியின் பக்கம்; செயல்முறைகளோ தற்போதைய இரக்கப்பணிகள் பக்கம். அநீத அரசுகளும், குழுக்களும் தனி நபர்களும் துயருறுவோர்க்குத் திருச்சபை துணைநிற்க வேண்டும் என்ற கொள்கையை மனமார ஏற்றுக்கொள்வர். அவ்வாறு திருச்சபை பணிபுரியப் பொருள்தரவும் தயங்கமாட்டார்கள். அநீதங்களினால் வாடும் மக்கள் அடிப்படை நீதியைப் பற்றிக் கேள்விகள் எழுப்பவில்லை என்றால் போதும்! திருச்சபை அதிகாரிகள் பலருக்கு இப்போக்குப் பொருத்தமாகத் தென்படுகிறது. 'திருச்சபை ஏழைகளின் நண்பன்', 'ஏழைகள் என்றும் நம்மோடிருப்பவர்' என்ற விருதுவாக்குகள் உதவி புரிவோருக்கு ஆன்ம திருப்தியளிக்கின்றன; ஏதோ சில சமயங்களில் உணவு, உடை முதலியன கிடைக்கின்றன என்பது உதவி பெறுவோருக்கும் ஆறுதல் அளிக்கின்றது.

**நீதியில் நழுவும் திருச்சபை நிறுவனங்கள்:**

அபார சக்திகள் இயக்கும் சூழ்நிலையை நாம் எவ்வாறு மாற்றிவிட முடியும் என்ற சோர்வுற்ற சிந்தனையில் உள்ள திருச்சபை அதிகாரிகள் இரக்கப்பாணியிலேயே செயல்படுகின்றனர். அநீதம் இழைக்கும் அரசியல் அதிகாரிகட்கும், வணிகர் குழுக்களுக்கும், தனி நபர்கட்கும் அவர்கள் சவால் விடுவதில்லை. ஏன், திருச்சபை அதிகாரிகள் சிலர் தங்கட்கு அடியில் — திருச்சபை நிறுவனங்களில், பங்குகளில் பணிசெய்யும் குருக்கள் துறவியர் ஆகியவர்கள் இழைக்கும் அநீதிகளில்கூடத் தலையிடத் தயங்குகின்றனர். இவர்கள் தங்களுடன் அல்லது தங்களுக்கடியில் பணிபுரியும் ஆசிரியர் ஆசிரியைகள், பணியாளர் ஆகியோருக்குச் செய்வதாகக் கூறப்படும் அநீதங்களைப்பற்றி விசாரித்தல் அதிகாரிகளுடைய கடமை. அநீதம் செய்வோரின் போலி அமைதியைக் குலைப்பது அவர்கள் பொறுப்பு. திருச்சபையில் உள்ள அநீதங்கள் மூலம் கிறிஸ்துவுக்கு எதிர் — சாட்சி தரப்படுகிறது; இவற்றைத் தடுக்கப்

பொறுப்பு இருந்தும், தடுக்காதவர்கள் பெரும் குற்ற வாளிகள் என்றே கூறவேண்டும்.

**கத்தோலிக்க நாடுகள் நீதிக்கோர் சாட்சியா ?**

கத்தோலிக்கத் திருச்சபை பரவியுள்ள சமுதாயங் களும், நாடுகளும் சமூக நீதிக்கு எடுத்துக்காட்டாக இல்லை. இலத்தீன் அமெரிக்காவில் திருச்சபை ஒரு நிறுவனம் என்ற முறையில் செல்வாக்குடன்தான் இருக்கின்றது. உலக கத்தோலிக்கரில் மூவரில் ஒருவர் அங்கு உளர். எனினும், அங்குள்ள எளிய மக்களின் அவல நிலையும், அவர்களைப் பணக்காரரர் சுரண்டி வாழும் நடவடிக்கைகளும் உலகிற்குத் தெரிந்ததே.

டான்சானியா குடியரசுத் தலைவர் கூறுகின்றார் : "திருச்சபை செல்வாக்குடனிருக்கும் ஸ்பெயின் சுதந் திரத்துக்கும் நீதிக்கும் அரும்பெரும் எடுத்துக்காட்டு அன்று. மேற்கு உலகில் பெரும் பொதுவுடைமைக் கட்சிகள் இத்தாலியிலும், பிரான்சிலும் உள என்று சுட்டிக்காட்டுவதில் அர்த்தம் இருக்கிறது. கத்தோலிக் கத் திருச்சபையினது, அதன் தலைவர்களது, பணி யாளர்களது தோல்வியின் பிரதிபலிப்பே இவை...... மனிதன் இறைச்சாயலில் படைக்கப்பட்டான் என் கிறோம். ஏழ்மை, அறியாமை, குருட்டாட்டம், அச்சம், அடக்குமுறை நிலை, இழி நிலை — இவற்றை உருவாகக் கொண்ட இறைவனை நான் ஏற்க மறுக்கின்றேன். எனினும், அவர் சாயலில் உருவான மக்களில் பெரு வாரியானவர், அந்நிலையில்தானே உளர்! ஆதலின், மனிதன்தான் மனிதனைப் படைத்துக் கொண்டிருக் கிறான்!........ திருச்சபையும், அதன் உறுப்பினரும், நிறுவனங்களும் இறையன்பை மனிதனுக்கு எடுத்துக் காட்டுதல் தேவை. தற்போதைய மனித சூழ்நிலையை ஆக்க வழிகளில் எதிர்த்துப் போராடி, சமுதாயத்தில் ஈடுபாடு கொண்டு, தலைமை ஏற்று நடத்தும் ஆர்வம் திருச்சபைக்குத் தேவை. அல்லாவிடில், அநீத, இடர்ப் படுத்தும் முறைகளுடன் அதுவே இணைந்ததாகக்

கொள்வர் மக்கள்......... திருச்சபையின் பிரதிநிதிகளும் நிறுவனங்களும் செயல்படும் வழிகளைக் கணிக்குங்கால், மனித முன்னேற்றம் ஏதோ தனிப்பட்ட, உள்நோக்கும் காரியம்போல் தென்படுகிறது. மனிதனது முன்னேற்றம் அவன் உழைத்துப் பொருள் தேடும் சமுதாயத்துடன் இணைந்தது என்பது சிந்தனையை விட்டு நழுவிவிட்டது போலும். திருச்சபையில் பலர் அமைவடக்கத்தைப் போதிக்கின்றனர்; இன்றைய சமுதாயப் பொருளாதார, அரசியல் அமைப்புகள் மாற்ற இயலாதன போன்று நடந்துகொள்கின்றனர்; எளியோரின் தாங்கமுடியா இன்னல்களை ஓரளவு தணிப்பதில் அன்பும் இரக்கமும் காட்டுகின்றனர். உண்மைதான் ; எனினும் உதவிபெறுவோரை மனிதப் பிறவியின் மதிப்புக்கு உயர்த்துவதில்லை. மாறாக, இழிநிலையில் தோய்ந்த ஏழ்மையினால் சிதைந்துள்ள மக்கள் மனிதப் பண்புகளுடன் சூழ்நிலையையே மாற்ற முற்படும்போது, திருச்சபையின் பிரதிநிதிகள் ஒதுங்கி நின்று விடுகின்றனர்.'' (டான்சானியா குடியரசுத் தலைவர், ஜூலியஸ் நியரெரெ நியூயார்க்கில் நடந்த மேரிநால் சகோதரிகளது 9ஆம் பொது அமர்வில், அக். 16, 1970–ல் கூறியது. 'மனிதன் விடுதலை பெற' என்பது சொற்பொழிவின் தலைப்பு.)

**வன்முறையின் எழுச்சியும் வேகமும்:**

புரட்சியின்றி முன்னேற்றம் இல்லை. வன்முறைகளைக் கையாளாத புரட்சிகள் சில சமுதாயங்களுக்கு முன்னேற்றத்தைத் தந்துள்ளன: காந்திஜி நம் நாட்டில் தோற்றுவித்த புரட்சி சத்தியத்தின் வலிமையை அடக்குவோருக்கு எண்பித்து வெற்றிகண்டது. ஆனால் வன்முறையின்றிச் சில புரட்சிகள் வெற்றி பெறுவதில்லை. ''ஸ்நாபக அருளப்பர் முதல் இதுவரை, விண்ணரசு பலவந்தத்திற்கு உள்ளாகி வருகிறது; பலவந்தம் செய்வோர் அதைக் கைப்பற்றுகின்றனர்.'' (மத். 11 : 12). பலவந்தம், வன்முறை என்றவுடன் நாம் தெளிவாகக் காணக்கூடிய வெளி நாசத்தைப்

பற்றித்தான் நினைவு எழுகிறது. ஆனால் ஆதிக்கம் செலுத்துவோரது கொடுமை நீடித்த, மறைமுகமான வன்முறை என்பதை மறத்தலாகாது. அநீதிக்கும், அவமானத்துக்கும் உட்படுத்தப்படும் மக்கள் பொறுமையின் எல்லையைக் கடந்தவுடன் பொங்கியெழுகின்றனர்; நாசவேலையில் ஈடுபடுகின்றனர். நொறுங்கிய வீடுகளையோ, வாகனங்களையோ, இயந்திரங்களையோ பார்த்து மக்கள் பெருமூச்சு விடுகின்றனர்; அதற்குமுன் நொறுங்கிய மனித இதயங்களைக் கணித்துச் செயல் முறையில் அனுதாபம் காட்டுவதில்லை!

யார் யாரது வன்முறை யாருடைய வன்முறைக்குக் காரணம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். முதலாளிகளது அல்லது தொழிலதிபரது அல்லது அரசினரது வன்முறை – அல்லது பல குழுவினரும் இணைந்து உருவாக்கும் அடக்குமுறைத் திட்டங்கள்தான் அடக்கப்பட்டோரது வன்முறையின் எழுச்சிக்குக் காரணம். சட்டமும், பாதுகாப்பு முறைகளும், பொலிஸ் துணையும் பெரும்பாலும் பணமுள்ளவர் பக்கம் இருப்பதால், அடக்கப்பட்டோருக்கு வன்முறையைத் தவிர வேறு கருவி இல்லாது போகின்றது.

**பிரபுக் குடும்பத்தில் தோன்றிய புரட்சியாளர்:**

பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரது தத்துவங்களைத் தழுவிய கிறிஸ்துவ ஒழுக்க – இறையியல் சாமானியரின் பசி, வியர்வை, இரத்தம், அவமானம், அவல நிலைமை, அடிமைத்தனம் ஆகியவற்றை ஆழ்ந்து உணரவில்லை என்றே கூறவேண்டும். அத்தகைய தத்துவத்திலும் இறையியலிலும் பயிற்சி பெற்றவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளிற் பங்கு பெறுவது அரிது. மிக அரிய எடுத்துக்காட்டாக அமைந்தார் கமிலோ டோரெஸ். ''குருத்துவத்தின் உரிமைகளையும், கடமைகளையும் ஒதுக்கி வைத்துள்ளேன்; ஆனால் என்றும் நான் குருதான். அயலார் மீதுள்ள அன்பினால் புரட்சிக்கு என்னை அர்ப்பணித்துள்ளேன் என்பது

என் துணிபு. இவ்வுலகப் பொருளாதார, சமுதாயச் சூழலிற் பிறர்மீதுள்ள அன்பை வாழ்ந்து காட்டுவதற்காகவே பூசைப்பலி அர்ப்பணிப்பதை நிறுத்தியுள்ளேன். எனக்கு விரோதமாய் என் அயலார் கொண்டுள்ள மனத்தாங்கல் நீங்கியபின், புரட்சி முடிவுறும்போது, இறைவன் திருவுளமிருப்பின், திரும்பவும் பூசைப்பலி அர்ப்பணம் செய்வேன். இவ்வழி நான் கிறிஸ்துவின் கட்டளைகளைப் பின்பற்றுகிறேன் என்று நம்புகிறேன்.'' (கமிலோ டோரெஸ், கிறிஸ்துவர்கட்கு ஒரு செய்தி, 3 ஆகஸ்டு 1965)

அவர் பிறந்து வளர்ந்தது தென் அமெரிக்காவில் உள்ள கொலம்பியா. பரப்பளவில் அக்கண்டத்திலேயே 3ஆவது இடம் வகிக்கும் அந்நாட்டின் மக்கள் தொகை 1 கோடி 70 இலட்சம்தான். அங்கு சமூக நீதியென்பது மருந்துக்கும் கிடையாதாம் — 12 ஆண்டுகளுக்குமுன், 24 பிரபுக் குடும்பங்கள் எல்லாச் சமூக மாற்றங்களையும் எதிர்த்தன. கமிலோ பிறந்தது அவற்றுள் ஒன்றிற்தான். 'இயற்கையில்' அவரது இதயத்தில் புரட்சி மனப்பான்மை உருவாகவில்லை. சமூக இயல் பயின்றார்; அதில் டாக்டர் பட்டம் பெற்றார். சிந்தித்தார், செபித்தார், அடக்குமுறையில் வாடியோரது வாழ்வுடன் தன் வாழ்வையும் இணைத்தார். புரட்சியாளருடன் சேர்ந்தார். அநீதங்களை நீக்கக் கொரில்லாப் போரில் இறங்கினார். சுட்டுக் கொல்லப்பட்டார்.

தான் விட்டுச்சென்ற பலியை இந்தக் குரு அமைதியான, அலங்காரம் செய்யப்பட்ட பீடத்தருகில் முடிக்கவில்லை.

புரட்சி, வன்முறை என்பவை பெரும் பிரச்சினைகள். திருச்சபையும் சமுதாயமும் மழுப்பாமல் அவற்றை அணுகுவது எவ்வாறு என்பதை எடுத்து விளக்கியவர் — கமிலோ டோரெஸ். தனது தீர்மானத்தின் விலக்கமுடியா விளைவுகளை ஏற்பதில் அவர் ஓர்

உன்னத எடுத்துக்காட்டு. மற்றவர்களைவிட அதிகத் தெளிவுடன் தன் சிக்கலான முடிவை உணர்ந்தார். ஆனால் அசைக்கமுடியாத குறிக்கோள் ஒன்று அவரை ஆட்கொண்டது. அது ஏழைகளது, ஒடுக்கப்பட்டோரது பக்கம் இருப்பதேயாகும்.

இந்தக் கண்ணோட்டத்தில் அவரது வாழ்வும் சாவும் திருச்சபைக்கும் சமுதாயத்துக்கும் ஓர் அறைகூவல். தனது 2000 ஆண்டு நெடிய வரலாறுபற்றி மகிமைகொள்ளும் திருச்சபை உண்டு. தனது சமூகப் பணிகளைப் பற்றிப் பெருமை கொள்ளும் திருச்சபை உண்டு. அதே சமயம் எளியோர், ஒடுக்கப்பட்டோர் நிறைந்த திருச்சபையும் உண்டு. 2ஆம் வத்திக்கான் சங்கம் திருச்சபை இவர்கள் பக்கமாக இருப்பதாக அறிக்கையிட்டுள்ளது. ஏட்டளவில் மட்டும்தான் என்பர் பலர். இந்தக் குற்றச்சாட்டுக்கு அரிய விதிவிலக்கு கமிலோ டோரெஸ்.

### பழங்காலத்துப் பயிற்சி முறைகள்!

குருக்களையும், துறவியரையும் பயிற்றுவிக்கும் முறைகளில் பெரும் மாற்றம் தேவை. இறைவனுக்கு அளிக்கும் அர்ப்பணத்தையும், மனிதருக்குத் தரும் பணியையும் இணைக்கும் புது வழிகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். ஏதோ, படிப்பும் செபமும் ஒருபக்கம் – சமூக ஈடுபாடு என்பது வேறுபக்கம் என்ற மனப்பான்மை நீடிக்கலாகாது. சமயாசமயம் சிறுவர் சிறுமியருக்கு மறைக்கல்வி (வாய்ப்பாடு போன்ற 'மந்திரங்களைக்') கற்பித்தல் மட்டும் சமூக ஈடுபாடு ஆகாது. மக்களோடு சாதாரண பாணியில் வாழ்ந்து, மக்களது மனப்பான்மையை உய்த்துணரப் புதுப்புது வாய்ப்புகள் பயிற்சிபெறுவோருக்கு அவசியம். இத்தகைய முறைகளில் உள்ள ஆபத்துக்களை மிகைப்படுத்தி என்றும் ஒதுங்கிய, 'பாதுகாப்பு' நிறைந்த சூழலில் உருவாகும் துறவியரும், குருக்களும் இவ்வுலக மக்களுக்கு இறைவார்த்தையை ஆழ்ந்த முறையில் எடுத்துரைக்க இயலாது.

எனினும், அனைவரும் ஒரே மனத்தவராய் இரார். சிலர் அமைதியான, சலனமற்ற பணி செய்யும் கருத்துடன் சேர்கின்றனர்; வேறு சிலர் மக்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் அதிகம் கலந்துகொள்ள விழைகின்றனர். எனவே, பயிற்சி முறைகளிலேயே—ஒரே பயிற்சி நிலையத்தில் அல்லது மடத்திற்கூட—வேறுபாடுகள் இருக்கக்கூடும் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்தல் அவசியம். எனினும், நற்செய்திப் பணிபுரிய விரும்பும் அனைவரும் இன்றைய மனிதப் போராட்டங்களைப் புரிந்து கொள்வதற்குத் தேவைப்படும் பத்திரிகைகளை, நூல்களைப் படிப்பதுடன், சூழ்நிலையை நன்கு அறிந்தவர்களுடன் உரையாடும் வாய்ப்பும் பெறவேண்டும்,

**குருக்களும் துறவியரும்**
***சாதாரண தெருக்களிலே வாழலாகாதா?***

பயிற்சி முற்றுப்பெற்றபின் குருக்களும் துறவியரும் மக்கள் மத்தியிலேயே ஏன் குடியிருக்கக் கூடாது? போதிய ஆன்ம வலிமையும் உடல் நலமும் கொண்ட ஒருசில குருக்களும், துறவியர் – குழுக்களும் எளியவர் வாழ்வில் ஏன் பங்கெடுக்கலாகாது? இவ்வாறு குருக்கள், துறவியர் ஆகியோரது வாழ்க்கைப் பாணி மாற்றம் அடைந்தால், குருகுலத்தினுடையவும், துறவியருடையவும் ஆன்மீக வாழ்வு வெகு முன்னேற்றம் அடையும். தம்மையே பலியாக்கிய இயேசுவின் அன்பை—நம்மோடு வாசம் செய்தவரது மனிதப் பண்புகளை—ஒரு சில குருக்களும், துறவியருமாவது வியத்தகு முறையிற் பிரதிபலிக்க வேண்டும். இவர்கள் மூலம் ஏனைய குருக்கள், துறவியர் ஆகியவரது முதிர்ச்சியும் வளரும். தற்போது பல துறவியரது மடங்களில் எத்தனைச் சில்லறைப் பிரச்சினைகள் முக்கியத்துவம் பெற்று, கன்னியரையும், சகோதரரையும், குருக்களையும் ஆட்டிவைக்கின்றன என்பதைப் பற்றிப் பலர் அறிவர். திருமணத் துறவினால் பெரிய தியாகம்

செய்தவரிடையே சிறுமைத்தனம் நீங்கி, பரந்த நோக்கங்கள் உருவாகி, நற்செய்திக்குத் துறவிகள் பணிபுரிய சமுதாயத் தொடர்பு ஒரு முக்கிய சாதனம்.

**தேவைக்குமேல் "மௌனத்துறவியர்"!**

சமூகப் போராட்டம் இல்லறத்தாரைச் சார்ந்தது என்று கூறிவிட்டு, துறவியரும், குருக்களும், ஆயர்களும் ஒதுங்கிவிடுவது இழுக்கு. தன் நண்பருக்காகத் தன் உயிரைத் தருவதை விட மேலான அன்பு இல்லை என்றார் இயேசு; அவர் அருளும் முழு அன்பை நேரடியாகத் தேடுவோர் துறவியரும், குருக்களும் என்று கூறுகிறோம்; ஆதலின் அன்புடன் இணைந்த தியாகத்தின் முன்அணியில் நிற்கவேண்டியவர்கள் இவர்கள் அல்லவா! இவர்கள் தங்களுக்கு வரக்கூடிய ஆபத்தைக் கண்டு அஞ்சி, நீதிக்காகப் போராடாது பின் வாங்குவது அழகல்ல. அநீதங்களைக் கண்டனஞ் செய்ய வாய்ப்புக் கிட்டும்போது மௌனம் காப்பது கடமையில் நழுவுவதாகும். குறிப்பாகத் துறவியருக்கு அறைகூவல் கூறுகின்றார் அருட்பே சுவாமிகள்:

''மாறிவரும், சிக்கலான சூழ்நிலைகளில் நித்திய உண்மைகளின் ஒளி விளக்கம் தருகின்றதா? அந்த உண்மைகளை மாற்றம், வளர்ச்சி முன்னேற்றம் ஆகியவற்றுடன் பின்னிப் பிணைப்பது எவ்வாறு? அநீதிக்கு இரையாகி அல்லல் உறுவோருக்கு இதுகாறும் கிறிஸ்துவப் பரிவைக் காட்டியிருக்கிறோம்; அவர்களது நெருக்கடித் தேவைகளை இரக்க உணர்ச்சியுடன் நீக்க முயற்சித்திருக்கிறோம். இனி இத்தகைய உதவிமட்டும் போதாது. அநீதத்துடன் எங்கட்குத் தொடர்பில்லை. அதனை எதிர்க்கிறோம் என்று மௌனம் சாதிப்பது மட்டும் போதாது. மாறாக, அநீதி எனும் பெரும் பாவத்தினாற் பீடிக்கப்பட்டுள்ள உலகில் துணிவுடன் எதிர்த்துப் பேசி, செயற்பட அனைத்துக் கிறிஸ்துவர்களுக்கும் கடமை உண்டு...... திருச்சபையில் மறை, கல்வி, உடல் நலம் இன்னும் மற்றத் துறைகள் மூலம்

பணியாற்றுகின்றோம். நமக்குள்ள ஆள்வலத்தைச் சீரான முறையிற் பகிர்ந்துகொள்கின்றோமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதிக தேவையுள்ளவருக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவேண்டுமெனில், நமது ஆள்வலம் வசதியுள்ளவர்கட்குப் பெருமளவில் அர்ப்பணிக்கப்படுவது நியாயமா? எந்தச் சூழ்நிலையில் எவ்வாறு கண்டனம் தெரிவிப்பது என்பதைப் பகுத்தறிய விவேகம் தேவை. எனினும், விவேகம் என்பது எப்போதும் எச்சரிக்கையுடன் பத்திரமாய் நடந்துகொள்வதன்று. விவேகம் ஒருபோதும் அச்சநிலைக்கு நம்மை அழைத்துச் செல்லக்கூடாது என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். கண்டனக் குரல் எழுப்புவதால் பாதிக்கப்படுபவர் யார் என்பதையும் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் தேவை. யாருடைய உரிமைகளைப் பாதுகாக்க விரும்புகின்றோமோ, அவர்களே பாதிக்கப்படுவார்களா—அல்லது நமது சொந்த உரிமைகளும், நமது நிறுவனங்களின் செல்வாக்கும் பாதிக்கப்படுமா என்பதைப் பகுத்தறிதல் அவசியம்.'' (பேத்ரோ அரூப்பே, இயேசு சபைத் தலைவர் – 'நீதிக்குச் சாட்சி பகர்தல்').

### கிறிஸ்துவர்கள் ஒருபோதும் 'சிறுபான்மையினர்' அல்ல!

ஆசிய நாடுகளில் கிறிஸ்துவச் சபைகள் 'சிறுபான்மைச் சமூகங்கள்' என்பது தவறு. இதை விளக்குகின்றார் டாக்டர் எம். எம். தாமஸ்; இறையியல் கண்ணோட்டத்தில், திருச்சபை என்பது இறைவன் - மனிதன் ஒன்றிப்பை உணர்த்தும் அருட்சாதனம்; மனுக்குலத்தின் இறுதிக் கதியின் அறிகுறி. ஆதலின் அனைத்து மக்களும் மனிதத்தன்மையில் வளர்வதைத் திருச்சபை விரும்புகிறது. எங்கெங்கு நீதியும், சுதந்திரமும், அன்பும் வளர்கின்றனவோ அங்கெல்லாம் திருச்சபையைக் காணவேண்டும். சிறுபான்மை, பெரும்பான்மை என்ற கருத்துக்களே திருச்சபையோடு ஒட்டாதவை ......... மற்ற மனிதருக்கு உரிய உரிமைகள் கிறிஸ்துவர்கட்கும் போதுமானவை. அலாதியான பாதுகாப்புக் கிறிஸ்துவ சமுதாயத்

துக்குத் தேவையில்லே. இது பறிபோய்விடும், அதை இழந்துவிடுவோம் என்ற பீதியினுல், நீதியை நிலே நாட்ட வேண்டிய சூழல்களில் வாய்திறவாமல் இருப்பது கிறிஸ்துவ சபைகளின் ஆன்மீக வாழ்வுக்கு இழுக்காகும்.

**ஆசியக் கத்தோலிக்க இளேஞர், இளம்பெண்கள் :**

'காலங்களின் அறிகுறிகள்' என்ற சொற்றெடரைப் பரவலாக்கியவர்களுள் ஒருவர் 23ஆம் அருளப்பர். திருச்சபை 20ஆம் நூற்றுண்டுக்குச் செய்தி பகர்கின்றது, உண்மைதான். அதே சமயத்தில் 20ஆம் நூற்றுண்டின் செய்திகளும், நிகழ்ச்சிகளும் திருச்சபைக்கு அறிகுறிகளாக இருத்தல்வேண்டும் என்பதை அவர் உணர்த்திஞர்.

இன்றைய ஆசிய நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கது இளேஞர், இளம் பெண்களின் எழுச்சி. 240 கோடி ஆசிய மக்களில் 21 வயதுக்குட்பட்டவர்கள் 60%. இறைவார்த்தையின் விளக்கம் அவர்கள் மூலமாகவும் திருச்சபைக்குக் கிட்டவேண்டும்.

முன்னேய சந்ததியாரைவிட இந்த இளம்பருவத்தினர் தங்கள் நாடுகளேயும், உலகத்தையும் பற்றிய அறிவில் தேர்ச்சிபெற்றுள்ளனர். இவர்களில் ஒரு பகுதியினர் சமுதாயப் பிரச்சினேகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள்; தீவிர மாற்றங்களே விரும்புகின்றனர்; செயல்படத் துடிக்கின்றனர்.

ஆர்வமுள்ள இளம் கத்தோலிக்கர் 15–20 ஆண்டுகளுக்குமுன் தர்க்கம் செய்த பிரச்சினேகள் வேறு; தற்போது ஆராய்ச்சி செய்யும் பிரச்சினேகள் வேறு. முன்பு திருச்சபையின் உட்-பிரச்சினேகள் அவர்களேக் கவர்ந்தன. பாப்பரசரின் தவருவரம், அமல உற்பவம், அன்னேயின் ஆரோபணம், கத்தோலிக்க சேவையின் இயல்பு ஆகியனபற்றி விவாதம் செய்தனர்; ஒழுக்க இயலேச் சார்ந்த 'கர்ப்பத்தடை' விஞ கூட்டங்களில் எழுந்தது. இப்போதோ, இவையனைத்தையும் கடந்து சமுதாய, மாநில, தேசீய, அகில உலகைச் சார்ந்த 'வாழ்க்கை – விஞக்கள்' தான் அவர்களேக் கவர்ந்து வருகின்றன.

திருச்சபையின் உட்பூசல்களைப்பற்றிச் சில சமயங்களிற் காரசாரமாய் விமர்சனம் செய்கின்றனர்; அதன் நிறுவனங்களில் நிகழும் கிறிஸ்துவ நீதியற்ற செயல்கள் அவர்களது விசுவாசத்தை ஆட்டி வைக்கின்றன. வாழ்வில் எளிமையையும் நேர்மையையும் நாடும், ஊக்கம் நிறைந்த கத்தோலிக்க இளைஞர், இளம் பெண்கள் திருச்சபை அதிகாரிகள், குருக்கள், துறவியர் ஆகியோரில் சிலரது பகட்டான வாழ்வைக் கண்டு வியப்படைகின்றனர். நமது கோவில்களில் நடைபெறும் பொதுவழிபாடுகள் பல அவர்களுக்கு அர்த்தமற்றதாய்த் தோன்றுகின்றன; சிறு குழுக்களில் பொருள் செறிந்த முறையில் இறைவழிபாடு நடத்தப் பெறுவதை விரும்புகின்றனர். அவர்களிடம் விசுவாசப் பிரச்சினைகள் பல உள்ளன. ஆனால் அவர்களிடம் 'விசுவாசம் இல்லை' என்று கூறுவது தவறு. இறைவனிடமும், இயேசுவிடமும் விசுவாசம் அவர்கட்கு இருக்கத்தான் செய்கிறது. திருச்சபை நிறுவனங்களிலும், ஒருசில திருச்சபை அதிகாரிகளிடமும் அவர்கள் கொண்டிருந்த விசுவாசம்தான் ஆட்டம் கொடுக்கத் தொடங்கிவிட்டது.

திருச்சபையையும் சமுதாயத்தையும் கடுமையாக விமர்சனம் செய்கிறார்களே, உருப்படியாக எந்தப் புது வழியைத்தான் காண்பிக்கிறார்கள் என்று சிலர் கேட்கலாம். தம் காலத்தில் இருந்த ஊழல்களைக் கண்டித்த இயேசுகூட புதுச் சமுதாயத்தின் அமைப்பு முறைகளைப்பற்றி விளக்கமாக எடுத்துக் கூறவில்லை. சோஷியலிஸ முறைகளில் மோகங்கொண்டவர்கள் அல்லவா இந்த இளைஞர்கள் என்றும் சிலர் ஏளனமாகப் பேசலாம். ஆழ்ந்த ஆராய்ச்சி செய்தால், முதலாளித்துவ முறையில் உள்ள குறைகள் நற்செய்திப் பண்புகட்கு இன்னும் அதிக முரண்பாடுள்ளனவாகத்தான் தோன்றும்!

**இன்று கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்குப் பயிற்சி:**

''கிறிஸ்துநாதர் அனுசாரம்'' 13ஆம் நூற்றாண்டில் உலகை முற்றும் துறந்த முனிவருக்கென எழுதப்பட்ட நூல்! அதில் சில பகுதிகள் எந்த யுகத்

திலும் எந்த நிலையினருக்கும் நன்மை பயக்கும் என்பது உண்மை. ஆனால் அந்த நூலின் அறிவுரைகள் அனைத்தும் 20ஆம் நூற்றாண்டின் கிறிஸ்துவ மக்கள் அனைவருக்கும் ஆன்மீக வலுவைத் தரும் என்று எதிர்பார்ப்பது முற்றிலும் தவறு. இவ்வுலக ஈடுபாட்டிலிருந்து நாம் ஒதுங்கிவிட வேண்டும் என்று அந்நூல் கூறுகின்றது. ஆனால் இன்று இயேசுவைப் பின்பற்றுவது என்றால், அவரைப்போல் இறைத்தந்தை பக்கமும் மனித சகோதர சகோதரிகள் பக்கமும் நாம் மனமாரத் திரும்பவேண்டும்; இவ்வுலகப் போராட்டங்களிலிருந்து அஞ்சி ஓடிவிடலாகாது; இயேசுவைப் போல் அநீதியினைக் கண்டனம் செய்யவேண்டும்; நீதியை நிலைநாட்டுவதற்காகத் துன்புறவும், உயிரைத் தரவும் கூடத் தயங்கலாகாது.

பிரமாண்டமான பிரச்சினைகள் உலகத்தில் நம் சகோதர சகோதரிகளை வாட்டும்போது, சில்லறைப் பிரச்சினைகளில் நம் நேரத்தையும் திறன்களையும் விரயமாக்கலாகாது. எடுத்துக்காட்டாக, இந்தியத் திருச்சபையில் வழிபாட்டு முறைகள், குருக்களுடைய, துறவியருடைய உடைகளைப்பற்றிய பிரச்சினைகள் முதலியன மிதமிஞ்சிய அளவு மக்களுடைய கவனத்தை ஈர்த்துவிட்டன. மிக முக்கிய பிரச்சினையாகிய சமூக நீதியையும், நற்செய்திப் பணியுடன் அது எத்துணை இணைந்தது என்பதையும் மறந்துவிடுகிறோம்! பொறுப்புள்ள அனைவரும் இந்நிலையை மாற்ற முயற்சி செய்ய வேண்டும். மக்களது சிந்தனைத் திசையைத் திருப்ப வேண்டும். நமது மீட்பர் இயேசு ஆசியக் கிறிஸ்துவ சமுதாயங்கள் மூலம் அனைத்து ஆசிய மக்களுக்கும் எவ்வளவு நன்மை செய்ய விரும்புகிறார் என்பதைப் பற்றி உரையாடி, செயற்படவேண்டும்.

இந்த அரிய பொறுப்பைச் செயல்முறைக்குக் கொண்டுவரத் திட்டமிட்ட முயற்சிகள் தேவை:

1. 'நற்செய்திப்பணி' எனும் கருத்தை ஆய்ந்து தெளிதல்; இவ்வுலகில் மனித நீதிக்கும் முன்னேற்றத்துக்கும், மறுவுலகில் முழுவிடுதலைக்கும் முடிவில்லா வாழ்வுக்கும் நம்மை அழைத்துச் செல்வது நற்செய்திப்

பணி என்பதைக் கிறிஸ்துவ சமுதாயம் ஆழமாகப் புரிந்துகொள்ளுதல்.

2. உலகைப்பற்றிய கிறிஸ்துவக் கண்ணோட்டத்தில் சமூக இயல் இறையியலுக்கு ஆற்றக்கூடிய பணியை வரவேற்பது.

3. சமுதாயத்தில் உள்ள சக்திகளையும், அவற்றினுள் இருக்கும் தொடர்புகளையும் புரிந்துகொள்ளுதல். ( அரசு — நிர்வாகம் — தொழில் — வாணிபம் — கல்வி — விவசாயம் — குடியிருப்பு முதலியன ஒன்று இன்னொன்றுடன் கொள்ளும் உறவுகள் )

4. தற்போதைய அமைப்பு முறைகளை எடைபோட்டுச் சீர்தூக்கிப் பார்த்தல்.

இதற்கு அடுத்தபடியாகத் திருச்சபையின் பலமும், சொத்தும் எந்தெந்த வழிகளிற் பயன்படுகின்றன என்பதை ஆய்வது தேவை. இன்று பெருவாரியாகக் கல்விக்கும், சமூகப் பணிக்கும்தான் பயன்படுகின்றன. இது முறையா என்ற கேள்வி எழவேண்டும். 100, 70 அல்லது 50 ஆண்டுகளுக்கு முன்கூடத் தேவையாகத் தென்பட்ட துறைகளிலேயே இன்றும் திருச்சபை பணியாற்ற வேண்டுமா? இன்னும் பெரிய பிரச்சினையாகிய சமூக நீதியில் அது ஈடுபட்டால், நற்செய்திப் பணியின் இன்றியமையாத அம்சமாகிய நீதியை நிலைநாட்ட உதவக்கூடுமே என்பதைப் பற்றிய சிந்தனைகள் எழவேண்டும்.

இன்று ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் நீதியுள்ள சமுதாயங்களை உருவாக்கும் கருத்துடன் உழைக்கும் குழுக்கள் உள. எனினும் பல அரசுகள், வாணிபக் கூட்டணிகள் முதலியன அந்தக் குழுக்களை நசுக்கிவிடக்கூடிய சக்தி வாய்ந்தவை. அதிகாரத்தையும் பணத்தையும் மனமுவந்து பகிர்ந்துகொள்ள முன்வருவோர் யார்? திருச்சபை தனது சொத்தையும், ஆன்மீகச் செல்வாக்கையும் நீதிக்காக உழைக்கும் குழுக்களுடன் இணைத்தால், சமுதாயங்கள் சீர்திருத்தம் அடைந்து, நீதியுள்ள உலகம் உருவாகும் வாய்ப்புகள் பெருகுகின்றன.

**'சமுதாயப்பாவம்' என்றெரு ரகம் உண்டா?**

அந்தரங்கத்தில் தனி மனிதர் கட்டிக்கொள்ளும் பாவங்களும் உண்டு. குழுக்களைச் சேர்ந்த பாவங்களும் உண்டு. ஒரு கிராமத்தின் அமைப்பு முறைகளில் அநீதியைக் காணலாம்; ஜாதி, மறை, பணச் செருக்கு ஆகியவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு, ஒரு குடும்பமோ அல்லது ஒரு குழுவோ மற்றவர்களை ஒதுக்கி வைக்கின்றனர் அல்லது அவர்களுக்கு அநீதி இழைக்கின்றனர். இன்னும் மாவட்ட, மாநில ரீதியில் பெரும்பான்மையினர் முன்னேற்றம் அடையாதபடி அநீத முறைகளைக் கையாளுகின்றனர் ஒரு சிலர். மாபெரும் அளவில், நாட்டினில் அல்லது உலக அரங்கில் நீதி மறைந்துவிடுகிறது; இனவெறி, படைப்பலம், பொருளாதார மமதை ஆகியனவற்றின் அடிப்படையில் ஒருநாடு பிறநாடுகளை நாகரீகமான அடிமைத்தனத்தில் வைத்திருக்கும் நிலைமையும் உண்டு.

இத்தகைய அநீதங்கள் சமூகங்களைச் சார்ந்தன. தனி நபரின் பொறுப்பு சிறிதாகத் தோன்றுகிறது. ஆனால் சமூகப் பாவத்தில் ஈடுபாடுள்ள நபர் ஒவ்வொருவரும் உடந்தையாகத்தானிருக்கின்றனர்.

உலக அரங்கில் இனவெறியும், இலாப வேட்கையும்தான் சமுதாயப் பாவங்களின் வேர்போல் அமைந்துள்ளன. ஆபிரிக்காவிலும், பிரிட்டனிலும், வட-அமெரிக்காவிலும் இனவெறி இழைக்கும் அக்கிரமங்களைப்பற்றிப் பத்திரிகைகளிற் படிக்கிறேம். இலாப வேட்கையோ சமுதாய ஊழல்களை மறைமுகமாகப் பரவலாக்கி வருகிறது. முதலாளித்துவப் பாணியில் முன்னேறிய நாடுகள், பாவம் புரையோடிய வாழ்க்கைப்பாணியை உலகில் திணித்து வந்துள்ளன; தன்னலம், போட்டி மனப்பான்மை, உயர்வு தாழ்வு உணர்ச்சிகள், சுரண்டற் போக்கு முதலியன அதன் அம்சங்கள். பல்நாட்டு வணிகர் குழுக்கள் இலாபத்தையே குட்டித் தெய்வமாகப் பாவித்துப் பல எளிய நாடுகளின் பொருளாதாரத்தைக் குலைத்துவருகின்றன. 'ஜெனரல் மோட்டர்ஸ்', 'ஷெல்' போன்ற நூற்றுக்

கணக்கான நிறுவனங்கள் உலகிற் பரப்பிவரும் மனப்பான்மை தன்னலத்திலும், உலோகாதயத்திலும் தோய்ந்தது.

கூட்டுப் பாவங்களினின்றும் இயேசு நம்மை மீட்கின்றார் என்பது நற்செய்தி. ஜாதி, வழக்கம், மாமூல் என்று கூறிவிட்டுச் சமுதாயப் பாவங்களுக்கு உடந்தையாய் இருத்தலாகாது என்று திருச்சபை நமக்கு அறிவுறுத்துகின்றது. ஏதோ, மறுவுலகு வாழ்வுதான் விடுதலை என்றெண்ணி, இவ்வுலகில் சமுதாயப் பாவங்களுக்கு நாம் பலியாக வேண்டியதில்லை என்பது நற்செய்தி. சமுதாயப் பாவச் சிக்கலிலிருந்து பிறரை விடுவிக்கப் போராடுவதும் நம் கடமை.

**விவிலியத்தில் சமூகப்பணி - சமுதாய விடுதலை:**

விவிலியம் சமூகப்பணியையும் வலியுறுத்துகிறது; சமூக நீதிக்கான போராட்டத்தையும் சுட்டிக்காட்டி அதில் ஈடுபடத் திருச்சபையை அழைக்கின்றது. நல்ல சமாரியர் குற்றுயிராய்க் கிடந்தவனுக்குத் தேவைப் படும் உதவி புரிகின்றான். ''இயேசு, 'நீரும் போய் அவ்வாறே செய்யும்' என்று கூறினார்'' (லூக். 10 : 37) எருசலேம் – எரிக்கோ சாலையையும், பாலஸ்தீனத்தின் ஏனைய சாலைகளையும் கள்வர் ஆபத்திலிருந்து விடுவிக்க அமைப்பு முறைகளை எவ்வாறு மாற்ற வேண்டும் என்று நல்ல சமாரியன் சிந்தித்துச் செயல் பட்டதாக நாம் படிப்பதில்லை. அவன் செய்தது அன்றைய விபத்தில் சமூகப் பணி.

மாறாக, யாத்திராகமத்தில் இஸ்ராயேல் மக்களை விடுவிக்க இறைவனால் ஏவப்பட்ட மோயீசனைப்பற்றிப் படிக்கின்றோம். அவல நிலையிலுள்ள யூதமக்களுக்கு இன்னும் சத்துள்ள உணவு தேவை என்றோ, உடையில், இல்லங்களில் மாற்றம் தேவை என்றோ, வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும் என்றோ மோயீசன் பரவோனிடம் வாதாடவில்லை. அடியோடு அடிமைத்தனத்திலிருந்து அவர்களை மீட்க முன்வருகிறார். ''நம் மக்களைப் போகவிடு'' என்று இறைவன் சார்பாக முழங்குகிறார் (யாத். 5 : 1). பரவோனின் அநீத ஆட்சிக்குச் சவால் விடுகின்றார். எகிப்திய சட்டங்களை மீறுகிறார்.

**இயேசுவும் புரட்சியும்:**

இயேசு யூத குலத்தைச் சேர்ந்தவர்; குருத்துவ மரபில் தோன்றியவர் அல்லர். வெறும் வெளி ஆசாரங்களின் கொடுமையிலிருந்து நம்மை விடுதலை செய்ய யூத குருக்களோடும், மறைநூல் அறிஞரோடும் போராடியவர்.

யூத மறை அமைப்பில் சடங்குகளும், சட்ட திட்டங்களும், ஒழுங்குகளும், வழிபாட்டு முறைகளும் மலிந்து கிடந்தன. இவற்றைத் தங்கள் சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டவர்கள் பலர். வேறு யார் மீதும் சாபமிடாத இயேசு மறைநூல் அறிஞரைப் பார்த்து "உங்களுக்கு ஐயோ கேடு" என்று கூறுகிறார். 'திருச்சட்டத்தின் முக்கிய படிப்பினைகளான **நீதி, இரக்கம், விசுவாசம்** ஆகியவற்றை விட்டு **விட்டீர்கள்:** ...... குருட்டு வழிகாட்டிகளே, கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறீர்கள்.'' நமக்கு அதிர்ச்சி தரும் இன்னும் சில சொற்களைப் பயன்படுத்தி அநீதம் இழைப்போரைச் சாடுகிறார்.

(காண்: மத். 23:13—32).

**சமூக அமைப்புகளில் அநீத விதிகளை எதிர்க்கின்றார்:**

மறை, சமுதாயம், பொருளாதாரம் ஆகியனவற்றைச் சேர்ந்த அமைப்புகள் இயேசுவின் காலத்திலும் பின்னிக்கிடந்தன. அர்த்தமற்ற, தேவையற்ற மரபுகட்கு விரோதமாக நடக்கின்றார் இயேசு. யூதர்களின் இன மமதையை அகற்றி சமாரியருடன் பழகுகின்றார். யூத மறையின் செருக்கைக் கண்டித்து, வேறு மறைகளைச் சார்ந்தோரையும் வரவேற்கின்றார். தங்கள் தூய்மையைப் பெருமையடித்துக் கொள்பவருக்குப் பாடமாக, 'பாவிகள்' எனப்பட்டவருடன் உறவு கொண்டாடி, விருந்துண்ண அமர்கின்றார். பெண்களை இச்சையுடன் நோக்குவதையே பாவம் என்றவர், தூய்மை உள்ளத்தோடு அவர்களுடன் உரையாடுவதில் தவறில்லை என்பதையும் எண்பிக்கின்றார்.

பணத்தின் ஆதிக்கத்தைக் கண்டனம் செய்கின்றார். ஆதலின் விதவைகளின் சொத்துக்களை விழுங்கும் வகையில் சட்டத்தைத் திரித்துப் பேசுவோரைத் தாக்குகின்றார்.

ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தோருக்கு அதிசய ஆலோசனை கூறுகின்றார்: பணியாளராக, ஏன், அடிமைகளாகவும் கூட மாறிப் பிறர் பாதங்களைக் கழுவ வேண்டும் என்பது அவரது அறிவுரை.

வன்முறையை இயேசு கையாளவில்லை. ஆனால் புரட்சியைப் போதித்தார்; வாழ்வில் கடைப்பிடித்தார். புரட்சியின் மூலம் நீதிநிறை சமுதாயத்தைத் தோற்றுவிக்க நம்மை அழைக்கின்றார்.

**மரியாளின் புரட்சிப் பாட்டு:**

1975இல் அகில உலக மாதர் ஆண்டு! ஏதோ ஒருவாறு அது முடிந்துவிட்டது என்று பலர் பெருமூச்சு விடுகின்றனர். பல கருத்தரங்குகள் நடைபெற்றன. கண்ட பலன் என்ன என்று சலித்துக்கொள்பவர் பலர். சமுதாயத்திற் பெண்கள் என்றும் தாழ்ந்தவர்களாய்த்தானிருப்பர் என்று சோர்வுறுவோர் சிலர்.

'எல்லாத் தலைமுறைகளும் பாக்கியவதி என்று என்னைப் போற்றும்': தெய்வீகப் பெருமிதத்துடன் இவ்வாறு மொழிந்த மரியாள் சமுதாயத்துக்கு இன்றும் ஒரு செய்தி விடுக்கின்றாளா? ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்குமுன் அவள் வாழ்ந்தது யூத சமுதாயத்தில். யூத மக்கள் ரோமையரது ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலம் அது. பணக்காரர், எளியவர் என்ற பிளவுகள் அவளது நாட்டிலும் காணப்பட்டன. தாழ்ந்தோர், உயர்ந்தோர் என்ற அகந்தை இதயங்களிற் குடிகொண்டிருந்தது.

'ஆண்டவருடைய அடிமை' என்று தன்னை அழைத்துக்கொண்ட மரியாள், தாழ்ச்சியைக் கடைப்பிடிப்பதற்காக இவ்வுலகப் பிரச்சினைகளினின்று ஒதுங்கிக் கனவுலகில் வாழவில்லை. கருவுற்ற இளம்பெண் நாசரேத்தூரை விட்டு விரைந்து செல்கின்றாள்: உறவினள் எலிசபெத்துக்கு உதவிபுரிய; தான் சுமந்து செல்லும் இயேசு மீட்பரின் சார்பில் உலகமனைத்துக்கும் நற்செய்தியைத் தருகின்றாள்: நன்றியும், ஆராதனையும், புகழ்ச்சியும் நிறைந்த புரட்சிப்பாட்டு அது. மூன்று விதமான புரட்சிகள் அதில் புதைந்திருக்கின்றன.

'பண்பாட்டுப் புரட்சி': 'நெஞ்சிலே செருக்குற்றோரைச் சிதறடித்தார்:- இறைவனை விட்டு விலகியிருக்கும் எல்லாச் சமுதாயங்களிலும் எண்ணற்ற வழிகளில் அகங்காரம் குடிகொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும், குழுக்களுக்குள்ளேயு மிருக்கும் செருக்கு – நாடுகளுக்குள்ளே தோன்றும் அகந்தை – இதனை இயேசு மீட்பர் நீக்குவார் என்பது நற்செய்தி.

**அரசியற் புரட்சி:** 'வலியோரை அரியணையினின்று அகற்றினார். தாழ்ந்தோரை உயர்த்தினார்'. எந்த அளவு அரசியல் சக்திகள் பாமரரை ஆட்டிவைக்கின்றன என்பதை அறியாதார் இலர். இயேசு கொணரும் சுதந்திரம் அந்நிய அரசியல் ஆதிக்கத்திலிருந்து மட்டுமன்று; ஒவ்வொரு நாட்டிலும், மாநிலத்திலும் மூலைக்கும் அநீத முறைகளினின்றும் நம்மை மீட்கும் என்பதை மரியாள் உணர்த்துகிறாள். ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த ஏரோது, குழந்தைகளைக் கொன்று, தன் அரியணையைக் காப்பாற்றுவான்: அத்தனை அரசியற் கொலைகள். இயேசு ரோமை அரசைக் கவிழ்க்க முயன்றவர் என்ற காரணத்தால் உயிர் இழப்பார்.

பொருளாதாரப் புரட்சி: 'பசித்தோரை நலன்களால் நிரப்பினார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.' இன்றைய பொருளாதாரப் பங்கீடு அநீதத்தில் தோய்ந்தது என்பது யாவருக்கும் தெரிந்ததே. ஏழைகளில் ஒருவராய் வாழப்போகும் இயேசுவைப் பெற்றெடுக்க இருப்பவள், இறையரசு இவ்வுலகில் தோன்ற வேண்டுமானால், பொருளாதாரம் எந்த அளவுக்குக் கைமாறவேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறாள்.

கிறிஸ்துவ பக்திக் கண்ணோட்டத்தில் மரியாளை ஏதோ ஒரு சீமாட்டியைப் போலப் படம்பிடித்து வைத்திருக்கின்றோம்: புறாக்கள் பக்கத்திலே பறக்க, அழகிய பட்டாடைகள் அணிந்து நம் வருகைக்காகக் குழந்தை இயேசுவுடன் என்றும் அமர்ந்திருக்கிறாள்! அலங்கரிக்கப்பட்ட முழங்காலிடும் பலகையில் தாழ்ச்சியுடன் என்றும் செபிப்பவள், வேலை செய்தறியாச் சீமாட்டி! அல்ல, வரலாறு நமக்கு அறிமுகப்படுத்துவது–ஒரு வலிய சாமானிய கிராமத்துப் பெண்.

தாழ்ச்சியும், தூய்மையும், தெய்வீக அன்பில் பரவசமும் நிறைந்தவள்தான் மரியாள். பாவிகளுக்கு அடைக்கலமும், துன்பப்பட்டவர்கட்கு ஆறுதலும், நோயாளிகட்குத் தேறுதலும் அவள் என்பது உண்மை தான். எனினும் சமுதாயத்துடன் தொடர்பற்ற மனிதப் பிறவியாக அவளைக் கருதுவது தவறு. இறைவனின் தாயாதலால், சாமானியப் பெண்களின் களைப்பு, கவலைகளினின்று விடுவிக்கப்பட்டவள் அல்ல அவள்.

முழு கர்ப்பிணியாக அக்காலத்து பாலஸ்தீன தெருக்கள்வழி 100 மைல் பிரயாணம் செய்தவள். இன்று எளிய நாடுகளிற் காணும் காட்சியை அவளும், சூசையும் கண்டனர்: பெரும் நகரங்களில் ஆயிரக் கணக்கான மக்களுக்கு வாழ்விடமோ வழிபாதைகள். டாலர், பவுண்டு கொண்டு வரும் உல்லாசப் பயணிகட்கோ எல்லா வசதிகளும் நிறைந்த விடுதிகள்— இதைப் போலவே மரியாளும் ஒதுக்கப்பட்ட நிலையில் இயேசுவை ஈன்றெடுத்தாள். ஏரோதுவின் வன்முறைக்குத் தப்ப எகிப்து செல்லவேண்டி யிருக்கிறது. ஆட்சியில் அமர்ந்தவரது பீதிநிறைந்த கொடுமைக்கு இரையாகும் அகதிகளில் அவளும் ஒருத்தி.

தன் இதயத்தில் இறைச்செய்தியையும், இறைவன் அனுமதித்த நிகழ்ச்சிகளையும் சிந்தித்து வந்த தாய், தன் மகன் இயேசுவுடன் எவ்வளவோ பகிர்ந்து கொண்டிருப்பாள். மக்கள் மீட்புக்காகத் தன் இதயம் ஊடுருவப்படவும் தயாராயிருந்தவள் அவள்.

ஆசியச் சமுதாயத்தில் வாய்ப்புகள் பெற்றுள்ள சிறுபான்மையினராகிய பெண்கட்கு அவள் சிறந்த எடுத்துக்காட்டு. இல்லறப்பெண்கள் எவ்வாறு தங்கள் சமுதாயம் முன்னேற, தங்கள் குடும்பங்களிலேயே பரந்த நோக்கத்தை உருவாக்க முடியும் என்பதற்கு அவள் வழிகாட்டி. நற்செய்தியில் ஏதோ வாய்ப்பாடு போல வாழ்வின் எல்லாக் கட்டங்களிலும் நாம் செய்ய வேண்டியன காணப்படும் என்று எதிர்பார்த்தல் தவறு. மரியாள் ஓர் இறை ஏவுதல். அவள் இறைவார்த்தையைச் சிந்தித்ததுபோல இல்லறப்

பெண்களும் சிந்தித்தால் சமுதாயத்துக்கு இறைவன் உளப்படி நன்மை செய்வார்கள்.

துறவியரும் சமுதாயத்தில் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று அழைக்கின்ருள் மரியாள். கார்மேல் மடத்துக் கன்னியர் போன்றவர்கள்தான் வாழ்வில் நேரடியாகத் தொடர்பு கொள்ளாது, இயேசுவின் இதயத்தில் மக்களுடன் உறவு கொள்பவர்கள். 20 ஆம் நூற்ருண்டின் ஏனைய துறவிகட்கு 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் உந்துதலுக்கேற்ப சமுதாய அழைத்தல் ஒன்று உளது. மரியாள் இந்த அழைத்தலின் முன்னேடி. ஏதோ செபம், தவம், ஞானவாசகத்தில் நாங்கள் ஆழ்ந்திருக்கிறேம்—உலகைத் துறந்தவர்கள் நாங்கள்—உலக அநீதிகளுடன் தொடர்பை அறுத்துவிட்டோம் என்று வாளாவிருப்பது மரியாளைப் பின்பற்றுதலுக்கு விரோதமாகும். ஆசியாவிலுள்ள 65,000 கன்னியர் ஆசியச் சமூகங்களை மாற்ற எவ்வளவோ உதவமுடியும். சிறப்பாக இந்தியாவிலுள்ள 37,000 கன்னியர், இலங்கையிலுள்ள 2,500 கன்னியர் நல்ல சமுதாயப் புரட்சியின் சிற்பிகளாகத் திகழ முடியும். ஆபத்துக் களுக்கு அஞ்சி ஒதுங்கி நிற்பது இழுக்கு. 'நீதிக்காகத் துன்புறுவோர் பேறுபெற்றோர்.' இல்லறத்தில் உள்ள வருக்கும் இயேசு இம்மொழி பகர்கின்ருர். பொது நிலையினர் தங்களுக்கு வரக்கூடிய இடரினுல் தங்கள் குடும்பமும் பாதிக்கப்படும் என்றுதெரிந்தும் இயேசுவை நீதிவழி பின்பற்றவேண்டும். அப்படியெனில் மணத் துறவு செய்தவர்கள் நீதிக்காகச் சமுதாயப் புரட்சி செய்வதிற் பின்தங்கினுல் எத்துணைக் கோழைகளாக இருக்கவேண்டும்.

மரியாள் துணிவு நிறைந்த பெண். இறை அன்பிலே முழு ஈடுபாடு கொண்டிருந்தவள்; சமுதாயப் புரட்சி களுக்கும் முன்னேடி. அவள் புதல்வர்களாகிய நாம் அன்பிலும் நீதிப்புரட்சியிலும் அவளது மனப்பாங்கைப் பிரதிபலிப்போம்.

---

N 1991

(அட்டை பக்கம் IIன் தொடர்)

**வழிகள் :**

(அ) அடிப்படைச் சமுதாயப் பிரச்சினைகளான நிலச் சீர்திருத்தம், வீட்டு வசதிகள், உணவுற்பத்தி, வேலைவாய்ப்புகள், நிதி ஒதுக்கீடு, தொழில் உறவுகள், உற்பத்திப் பங்கீடு, வருமானம், அதிகாரம் ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளுதல் போன்ற முக்கிய துறைகளில் ஆய்வுகள் ஆரம்பிப்பதும், செயற்குழுக்களை உருவாக்குதலும், செயற்றிட்டங்கள் வகுத்தலும் எங்களின் பணிகளாக அமைவன. இத்துறைகளில் பணிபுரியும் பிறரோடு இணைதலும், இணக்கமேற்படுத்தலும் எங்கள் வழிகளாகும்.

(ஆ) ஆக்கபூர்வமான அறவழியில் இலட்சியங்களை எய்தற்கான செயற்பாடுகளை உருவாக்குதல்; கருத்து வேறுபாடுகளாலும், இன, சமய பேதங்களாலும் ஏற்படுகின்ற சச்சரவுகளை ஒழித்து, மானிட இணக்கத்தையும், ஒத்துழைப்பையும் உருவாக்குதல்.

(இ) மக்களிடையே சமுதாய சூழ்நிலைகளைப் பற்றிய உணர்வுகளை வளர்த்தலும் சமுதாயத்தையும், அதனை அணுகிய பிரச்சினைகளையும் ஆய்வதற்கான ஆற்றல்களையும் வழிமுறைகளையும் வளர்த்தலும்.

(ஈ) எல்லாச் சமயங்களினதும், தத்துவங்களினதும் சீரிய சிந்தனைகளை வரவேற்று, அவற்றுடன் ஒத்துழைத்துச் சமுதாய ஈடேற்றத்துக்கு வழிவகுத்தல்.

(உ) இத்தகைய இலட்சியங்களுடன் இயங்கும் பிற இயக்கங்களோடு ஒத்துழைத்தல்.

(ஊ) இந்த அடிப்படையில் இயங்குகின்ற பிறநாட்டு நிறுவனங்களோடு ஒத்துழைப்பதன் மூலம் சர்வதேச அடிப்படையில் சமுதாய நீதியும், அபிவிருத்தியும் மானிட சகோதரத்துவமும், சமாதானமும் உருவாகச் சேவை மனப்பான்மையோடு உழைத்தல்.

## அழைப்பு

இந் நிலையத்தோடு தொடர்புகொண்டு பொதுத்தொண்டில் ஈடுபடவும், பயன் பெறவும் நாம் அழைப்பு விடுக்கிறோம்.

**விமுக்தி வெளியீடுகள்**
சமய, சமூக நிலையம்,
281, டீன்ஸ் வழி,
கொழும்பு 10.

JAFFNA ... COLLEGE LIBRARY
16 OCT 1979
VADDUKODDAI JAFFNA

JAFFNA COLLEGE LIBRARY
16 OCT 1979
VADDUKODDAI

## எங்கள் வெளியீடுகள்

(சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன).

(1) பல்நாட்டு நிறுவனங்களும் விடுதலையும்

(2) சீனப்புரட்சியும் நாமும்

(3) ஆசியப் பெண்கள்

(4) உணவு ஆயுதங்கள் அல்ல

(5) இயேசுகிறிஸ்துவும் மானிட விடுதலையும்

(6) பெண் விடுதலை

(7) தேசிய விடுதலையும், தேசியமும்

கிடைக்குமிடம்:

**விமுக்தி வெளியீடுகள்**

281, டீன்ஸ் வழி,

கொழும்பு – 10.

தொலைபேசி: 95425

சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில், குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு, கொழும்பு விமுக்தி வெளியீட்டாளரால் வெளியிடப் பெற்றது. 1083/9-76